ஸ்ரீ:.

ஶ்ரீமதே லக்ஷ்மீந்ருஸிம்ஹபரப்ரஹ்மணே நம:.

# வேதாந்த தீபிகை.

பத்ராதிபர்:—திவான் பகதூர் டி. டி. ரங்காசார்யர், பி.ஏ., பி.எல்.

ஸம்புடம் 9.] ஸித்தார்த்தி௵ வைகாசிமீ [ஸஞ்சிகை 8.

த்ரிபுவநகமநம் தமாலவர்ணம் ரவிகரகௌரவராம்பரம்
ததாநே - வபுரலககுலாவ்ருதாநநாப்ஜம் விஜயஸகே
ரதிரஸ்து மேऽநவத்யா ॥ [ஸ்ரீ பாகவதம் 1-9-33.]

## பத்ராதிபரின் குறிப்புக்கள்.

பகவத் ஶாஸ்த்ரத்துக்கு மூல ப்ரமாணம்.

“ நாராயணோ ஹி விஶ்வாத்மா சதுர்மூர்த்தி: ஸநாதந: ।
தர்மாத்மஜஸ்ஸம்பபூவ । * * * க்ருதே யுகே
மஹாராஜ புரா ஸ்வாயம்புவேऽந்தரே ।
நரோ நாராயணஶ்சைவ ஹரி: க்ருஷ்ண: ஸ்வயம்பு
வ: ॥ தேஷாம் நாராயணநரௌ தபஸ்தேப
துரவ்யயௌ । பதர்யாஶ்ரமமாஸாத்ய ஶகடே
கநகாமயே ॥ அஷ்டசக்ரம் ஹி தத்யாநம் பூதயுக்தம் மநோ
ரமம் । தத்ராத்யௌ லோகநாதௌ தௌ க்ருஶௌ தமநிஸந்ததௌ ॥ தப
ஸா தேஜஸா சைவ துர்நிரீக்ஷௌ ஸுரைரபி । யஸ்ய ப்ரஸா
தம் குர்வாதே ஸ தேவௌ த்ரஷ்டுமர்ஹதி ॥ * * * நாரத:
ஸுமஹத்பூதம் ஸர்வலோகாந் வீசரத் । தம் தேஶம் அகமத்
ராஜந் பதர்யாஶ்ரமமாஶுக: ॥ தயோராஹ்நிகவேலாயாம் தஸ்ய
கௌதூஹலம் த்வபூத் ॥ இதம் தத்ஸ்வஸ்தம் க்ருத்ஸ்நம் யஸ்மிந் லோகா:

ப்ரதிஷ்டிதா: ॥ ஸதேவாஸுரகந்தர்வா: ஸகிந்நரமஹோர
கா: । ஏகா மூர்த்திரியம் பூர்வம் ஜாதா பூயஶ்சதுர்விதா ॥
தர்மஸ்ய குலஸந்தாநே தர்மாதேபிர் விவர்த்தித: । ஸஹோ
ஹ்யநுக்ரஹீதோ(அ)ஸ்ய தர்மவஹ்நிஸ்ஸமைரிஹ ॥ நர நாரா
யணாப்யாம் து க்ருஷ்ணேந ஹரிணா ததா । தத்ர க்ருஷ்ணோ ஹரிஶ்சைவ
கஸ்மிம்ஶ்சித் காரணாந்தரே ॥ ஸ்திதௌ தர்மஸுதாவேதௌ ததா
தபஸி ஸ்திதௌ " । இந்த ரீதியாக மஹாபாரதம் விவரிக்கின்றது. ஸ்வாயம்புவமந்வந்தர க்ருதயுகத்தில் நாராயணனே நான்கு மூர்த்திகளாய் ஸ்வயம் தர்மதேவதை புத்ரர்களாய் அவதாரம் செய்தார். அவர்களுக்கு முறையே நாராயணன், நரன், ஹரி, க்ருஷ்ணன் என்று பெயர்; அவர்க்குள் நாராயணநரர்கள் பதர்யாஶ்ரமத்தில் தபஸ் புரிந்தனர். எட்டுச் சக்ரங்களுடையதும், பஞ்சபூதங்களால் ரம்யமாக அமைந்ததுமான ஒரு ஸ்வர்ண ரதத்தின் மீது இருந்து, லோகநாதர்களான அவர்கள் தபஸ்ஸால் இளைத்துப் போய், தேஜஸ்ஸால் தேவர்கட்கும் அதர்ஶநீயர்களாய் இருந்தார்கள். அவர்களுடைய ப்ரஸாதமற்றவன் அவர்களைத் தர்சிக்க யோக்யனாகமாட்டான். ஸர்வலோக ஸஞ்சார ஸமர்த்தரான நாரதர் அவர்களைத் தர்சிக்கவேண்டுமென்று பதர்யாஶ்ரமத்தில் இறங்கினார். அப்போது நரநாராயணர்களுடைய ஆஹ்நிகவேளை. "தேவாஸுரகந்தர்வ கிந்நர மஹோரகர்கள் உள்பட, ஸர்வலோகங்களும் எவனை ஆதாரமாக உடையனவோ, அவனுடைய ஸ்தாநம் இதுவே. முன் பகவான் ஒரே மூர்த்தியாக நின்றான். தர்மதேவதையினுடைய குலவ்ருத்தியின் பொருட்டு அவனே நான்கு சரீரங்களோடு அவதாரம் செய்தனன். இவர்களால் தர்மதேவதை அநுக்ரஹிக்கப்பட்டார். ஹரியும் க்ருஷ்ணனும் இங்கு முன் இருந்தார்கள். நரநாராயணர்கள் இங்கே தபஸ்செய்கின்றார்கள். இவர்களே பரமஸ்வரூபமாயும், ஸர்வபூதங்கட்கும் காரணமாயுமிருக்க, எந்த பித்ருக்களையும் தேவதைகளையும் உத்தேசித்து இவர்கள் ஆஹ்நிகக்ரியை செய்கின்றனர்?" இவ்வண்ணம் நாரதர் எண்ணமிட்டுக்கொண்டு, அவர்கள் முன்பாகச் சென்றார். அவர்களால் பார்க்கப்பட்டார்; விதிப்படி பூஜிக்கவும் பட்டார். பிறகு ருஷி ரூபதாரியான லோகநாதனை நமஸ்கரித்துவிட்டு, "வேத வேதாங்க புராணாதிகளில் தேவரீர் கொண்டாடப்படுகின்றீர்.

தேவரீர் ஆத்வந்தம் அற்றவர்; ஶாஶ்வதர்; ஜகத்தை ஸ்ருஷ்டித்துப் போஷிக்கின்றீர்; அம்ருத ஸ்வரூபமும் தேவரீரே. இந்த ஸர்வஜகத்தும் ஸர்வகாலத்திலும் தேவரீரையே ஆதாரமாயுள்ளது. க்ருஹஸ்தாஶ்ரமத்தை மூலமாய் உடைத்தான ஸர்வாஶ்ரமஸ்தர்களும் நாநா மூர்த்திகளாய் ஆவிர்ப்பவிக்கின்ற தேவரீரையே ஆராதிக்கின்றார்கள். தேவர்கட்கும் ஏனையோர்க்கும் ஶாஶ்வதமாகத் தேவரீரே பிதாவாகின்றீர்; மாதாவுமாகின்றீர். அப்படியிருக்க எந்தத் தேவதையை, எந்தப் பிதாவைத் தேவரீர் பூஜிக்கின்றீர் என்று அடியேன் அறிகின்றிலேன்; தேவரீரையே வினவுகின்றேன்'' என்று நாரதர் உரைத்தார்.

அதன்பிறகு ஸ்ரீபகவான் மொழிந்தார். ''ப்ரஹ்மந்! நீர் கேட்ட விஷயம் வெளியிடத்தகாததும், புராதந ரஹஸ்யமாயிருக்கின்றது. நீர் என்னிடம் பக்தியுள்ளவர்; ஆதலால் உள்ளபடியுரைக்கின்றேன். ஸூக்ஷ்மமாய், அறிவுக்கெட்டாததாய், இந்த்ரியங்கட்குப் புலப்படாததாய், நித்யமாய், ஸ்திரமாய், இந்த்ரியங்கள் இந்த்ரியார்த்தங்கள் மஹாபூதங்கள் இவற்றுடன் யாதொருதுவக்கும் அற்றதாய், ஸர்வப்ராணிகட்குள்ளும் அந்தராத்மாவாய், க்ஷேத்ரஜ்ஞன் என்று சொல்லப்பட்டதாய், த்ரிகுணங்களை அதிக்ரமித்ததாய் இருக்கும் பரவஸ்து வேதங்களில் 'புருஷன்' எனப்படுகின்றது. அந்த மஹாபுருஷனிடத்தினின்று த்ரிகுணாத்மகமான அவ்யக்தமெனப்பட்ட மூலப்ரக்ருதி உண்டாயிற்று. அந்த ஶாஶ்வதையான ப்ரக்ருதியானது அவ்யக்தமாயிருக்கையிலும் ஸர்வவ்யக்த பதார்த்தங்களிடமும் இருக்கின்றது. நாங்களும் (நரநாராயணர்கள்) அதனிடம் ஜநித்தோம். சேதநாசேதநரூப ஸர்வபதார்த்தங்களிடமும் அந்தராத்மாவாகவிருக்கும் அம்மஹாபுருஷனை நாங்கள் ஸர்வதேவ பித்ருகர்மங்களாலும் பூஜிக்கின்றோம். பித்ருக்களிலும் தேவர்களிலும் அவர்க்கு மேற்பட்டவர் ஒருவரும் இலர். அவர் எங்கட்கு ஆத்மாவாயிருக்கின்றார். அவரை நாங்கள் பூஜிக்கின்றோம். லோகரக்ஷணார்த்தமாக இந்த் வ்யவஸ்தைகளை அவர் நியமித்தார். ஸர்வதேவ பித்ருகர்மங்களும் அநுஷ்டிக்கத்தக்கதென்று அவரது அநுஶாஸநம். ப்ரஹ்மா, ஸ்தாணு, மநு, தக்ஷர், ப்ருகு, ர்மதேவதை, யமன், மரீசி, அங்கிரஸ், அத்ரி, புலஸ்த்யர், புலஹர், க்ரது, வஸிஷ்டர், பரமேஷ்டி, விவஸ்வாந், ஸோமன், கர்தமர், க்ரோதர், அவிக்ரீ

தர் ஆகிய இந்த ப்ரஜாபதிகள், அந்த மஹாபுருஷனுடைய மேற்சொன்ன ஶாஶ்வதமான மர்யாதையைப் பூஜிக்கின்றனர். தேவபித்ரு கர்மங்கள் பகவதாஜ்ஞைப்படிச் செய்யவேண்டியவைகளென்று அவர்கள் அறிந்தவர்களாய்த் தாங்கள் அபேக்ஷித்த புருஷார்த்தங்களை அக்கர்மங்களை யநுஷ்டித்தே ஸம்பாதித்துக்கொண்டார்கள். ஸ்வர்க்கவாஸிகளான புருஷர்களும் அந்த மஹாபுருஷனை ஆராதித்து, அவனுடைய ப்ராஸதத்தால், அவனால் விஹிதங்களான பலங்களை யடைகின்றனர். எந்தப் புருஷர்கள் பஞ்சகர்மேந்த்ரியங்கள், பஞ்சஜ்ஞாநேந்த்ரியங்கள், பஞ்சப்ராணன்கள், மநஸ், புத்தி, எனப்பட்ட பதினேழு குணங்களையும், தத்காரிதங்களான கர்மங்களையும், ஶரீரரூபமான பதினைந்து கலைகளையும் அதிக்ரமிக்கின்றனரோ அவர்கள் முக்தர்கள் என்பது நிஶ்சயம். முக்தர்களுடைய பரமமான கதி க்ஷேத்ரஜ்ஞனென்று யோசிக்கப்படுகின்றது. அவனை ஸர்வகதி யென்றும் நிர்குணனென்றும் சொல்வார்கள். அவன் ஜ்ஞாநமயன். அவனிடம் நாங்கள் உண்டானோம். இவ்வண்ணம் ஸர்வாத்மாவான ஸநாதநனை நாங்கள் அறிந்து ஆராதிக்கின்றோம். வேதங்களும் ஆஶ்ரமங்களும், பல ஶரீரங்களுடன் கூடிய அம்மஹாபுருஷனையே பக்தியுடன் பூஜிக்கின்றன. ஸர்வகர்ம ஸமாராத்யனான அவனே அவர்களுக்கு அபேக்ஷித பலங்களைக் கொடுக்கின்றான். ஆனால் லோகத்தில எவர்கள் அவனையே சிந்தித்துக்கொண்டு ஏகாந்தித்வத்தை ஸாதித்துக்கொள்கின்றனரோ, அவர்கள் இன்னும் அதிகமான பலத்தைப் பொருந்துகின்றனர். அவர்கள் அவனிடமே ப்ரவேஶிக்கின்றார்கள். ஓ நாரத! இவ்வண்ணம் ரஹஸ்யார்த்தங்கள் உமக்கு வெளியிடப்பட்டன. எங்களிடம் உமக்குள்ள பக்தியினாலும், பகவானிடம் நீர் கொண்டிருக்கும் பக்திப்ரேமைகளாலும் இவற்றைக் கேட்கப்பெற்றீர்.”

இவ்வாக்யங்களைக் கேட்டபின்பு, நாரதர், “ஸ்வஸங்கல்பத்தால் அவதரிக்கும் தேவரீர், தர்மதேவதையினுடைய க்ருஹத்தில் எதை உத்தேசித்து நான்கு மூர்த்திகளாக அவதாரம் எடுத்தீரோ, லோகஹிதத்தின் பொருட்டு அந்த உத்தேஶ்யம் நிறைவேறட்டும். தேவரீருடைய மூலஸ்வரூபத்தைத் தர்சிக்க வேண்டிச் செல்கின்றேன். ஓ லோகநாத! வேதங்களை நன்றாக அத்யயநம் பண்ணினேன்; தபஸ் புரிந்தேன்; இதுவரையில் ஒருபொய்

யும் சொன்னேனில்லை; குருக்களுடைய பூஜையை இடைவிடாமல் செய்தேன்; பரர்களுடைய ரஹஸ்யங்களை வெளியிட்டேனில்லை; ஶாஸ்த்ரங்கள் காட்டினபடியே கைகால் உதர குஹ்ய ப்ரதேசங்களை தர்ம விருத்தங்களான வ்யாபாரங்களினின்று விலக்கி ரக்ஷித்தேன்; ஶத்ருமித்ரர்களிடம் என்றும் ஸமமாக வர்த்தித்தேன்; அந்த ஆதிதேவனை ஏகாந்த பாவத்துடன் என்றும் ஆஶ்ரயித்தவனாய்க்கொண்டு, அவனையே ஆராதிக்கின்றேன். இவ்வண்ணம் விஶேஷ கர்மங்களால் சித்தஶுத்தியை அடைந்த நான் ஸர்வேஶ்வரனான அநந்தனை ஏன் தர்சிக்காமல் போவேன்?'' என்று சொன்னார். அதைக்கேட்டுப் பதரீகாஶ்ரம வாஸியான ஸநாதந தர்மரக்ஷகனும் நாரதர்க்குக் கமநத்தின்பொருட்டு விடையளித்தார். நாரதரும் தமது யோகப்ராபவத்தால் ஆகாசமார்க்கமாக மேரு பர்வதத்தைப் போய்ச்சேர்ந்தார்; அவ்விடம் ஒரு ஏகாந்த ப்ரதேசத்தை அடைந்து, வடமேற்குத்திசையில், க்ஷீராப்தியின் உத்தர பார்ஶ்வத்தில் இருந்த ஶ்வேத த்வீபத்தைக் கண்ணுற்றார். அவ்விடம், முக்தர்களைப்போல் பாஹ்யேந்தரிய ரஹிதர்களாயும், பசியற்றவர்களாயும், கண்ணிமை கொட்டாதவர்களாயும், நல்ல கந்தத்துடன் கூடினவர்களாயும், ஸத்வகுண ப்ரதாநர்களாயும், சந்த்ர ஸமாந வர்ணத்துடன் கூடினவர்களாயும், பாபரஹிதர்களாயும், பாபாத்மாக்களுடைய கண்களுக்கு அகப்படாதவர்களாயும், வஜ்ரம்போன்ற ஶரீரங்களை யுடையவர்களாயும், ஸமமாயும் அழகாயுமுள்ள அவயவ யுக்தர்களாயும், பலிஷ்டர்களாயும், பருத்த ஶிரஸ்ஸுகளுடையவர்களாயும், மேகம்போன்ற த்வநியுடன் கூடினவர்களாயும், பரமபுருஷனை ஸாக்ஷாத்கரித்து பக்தியுடன் அநுபவிப்பவர்களாயும் உள்ள புருஷர்களை நாரதர் தர்சித்தார்; தர்சித்துச் சிரத்தால் வணங்கினின்றார். அவர்களும் நாரதரை மநஸ்ஸால் பகுமாநித்தார்கள். ஜபத்தில் ஆஸக்தராய், மஹாதபஸ்ஸில் ஶ்ரமப்பட்டவராயிருந்த நாரதர், ஐததைகாகர்யத்துடன் கைகளைத் தூக்கிக்கொண்டு, ஸ்ரீ பகவானைத் தர்சிக்கவேண்டுமெனும் இச்சையுடன் ஸ்தோத்ரம்செய்ய ஆரம்பித்தனர். அந்த ஸ்தோத்ரத்தை இங்கே விவரிக்கின்றோமில்லை; மஹாபாரதத்தில் கண்டுகொள்வது யுக்தம்.

பரமரஹஸ்யார்த்தங்களுடன்கூடிய ஸத்யமான அந்த ஸ்தோத்ரத்தால் துஷ்டனான ஸ்ரீபகவான், நாரதர்க்குத் தர்சந

ளித்தார். நாரதர் தர்சித்த பகவத்ரூபமானது சந்த்ரனைக் காட்டிலும் கிஞ்சித் பரிசுத்தமாயும், கிஞ்சித் வ்யாவர்த்தித்தும் தோற்றியது; கிஞ்சித் அக்நியைப்போன்று ஜ்வலித்தது; கிஞ்சித் ஸுக்ரனுடைய தேஜஸ்ஸைப்போன்றிருந்தது; கொஞ்சம் கிளியினுடைய இறகைப்போல் ப்ரகாசித்தது; கொஞ்சம் ஸ்படிகத்தை யொத்தது; கொஞ்சம் இந்த்ரநீல மலையைப்போன்றது; கொஞ்சம் ஸ்வர்ணச்சாயையைப் பொருந்தியது; கொஞ்சம் ப்ரவாளக் கொடியைப்போன்றது; கொஞ்சம் வெண்மையைத்தாங்கியது; கொஞ்சம் ஸ்வர்ணவர்ணநுஸாரியாயும், கொஞ்சம் வைடூர்யத்தை யொத்தும் விளங்கியது; நீல வைடூர்யத்தையும் இந்த்ரநீலத்தையும் கொஞ்சங்கொஞ்சம் அநுஸரித்தது; மயிலுடைய கண்டத்தையும், முக்தாஹாரத்தையும் சிற்சில விடங்களில் அநுகரித்தது. இவ்வண்ணம், ஸநாதநனான பகவான், பகு வர்ணங்களுடன் கூடினவராய், ஆயிரங்கண்களையும், நூறு ஸிரஸ்ஸுக்களையும், ஆயிரம் பாதங்களையும், ஆயிரம் கைகளையும் உதரங்களையும் சிலவிடங்களில் ஆவிஷ்கரித்து, மற்றவிடங்களில் அவ்யக்தராகவும் காணப்பட்டார். ஓரிடத்தில் பகவான் வதநத்தினின்று ப்ரணவமும், மற்றோர் முகத்தினின்று ஸாவித்ரியும், மிகுதியான ஸ்தாநங்களினின்று ஸ்ருதியினுடைய பற்பல பாகங்களும் ஆவிஷ்கரித்தன. வேதி, கமண்டலு, தர்ப்பம், ஸுமம், அஜிநம், தண்டகாஷ்டம், எரிகின்ற அக்நி முதலானவற்றை யஜ்ஞேஸ்வரன் தமது பல கைகளில் ஏந்திநின்றார்.

இது புருஷஸூக்த ப்ரதிபாத்யமான விஸ்வரூபம். இதைத்தான் கீதையின் பதினோராவது அத்யாயத்தில் விவரித்த க்ரமத்தில் அர்ஜுநன் தர்சித்தான். இவ்வண்ணம் நாரதராலும், அர்ஜுநனாலும், மற்றவர்களாலும் தர்சிக்கப்பட்டது கேவலம் தோற்றமோ, அல்லது ஸத்யமாய் உண்டான திவ்ய விக்ரஹமோ, என்பதைப்பற்றி நாம் இங்கே தர்க்கிக்கின்றோமில்லை. இதே அத்யாயத்தில், 'மாயா ஹ்யேஷா மயா ஸ்ருஷ்டா யந்மாம் பஸ்யஸி நாரத । ஸர்வபூதகுணைர்யுக்தம் நைவம் த்வம் ஜ்ஞாதுமர்ஹஸி॥' என்று பகவானே தனது ரூபத்தைப்பற்றி நாரதர்க்கு உரைத்தார். ஸ்ரீ ஸங்கராசார்யர் அந்தராதிகரண பாஷ்யத்

தில், [illegible] என்று சொல்லி, மேலெடுத்த ஶ்லோகத்தையே ப்ரமாணமாக உதாஹரிக்கின்றூர். கீதாபாஷ்யாரம்பத்தில் ஸ்ரீ ஶங்கராசார்யர் பகவானுடைய அவதாரவிஶேஷத்தைப்பற்றிச் சிந்திக்குமிடத்தே, ஸர்வேஶ்வரன் வஸுதேவர் க்ருகத்தில் தேவகியின் கர்ப்பத்தில் இருந்தது போலவும், அங்கிருந்து ஜநித்தது போலவும், இந்த லோகத்தினுடைய வ்யவஹாரத்தில் பல ப்ரகாரமாக அந்வயித்தது போலவும், கேவலம் ஒரு தோற்றத்தைக் காட்டினர் என்கிறபடியே யோசிக்கின்றூர். பகவானுக்கு ரூபமும் இல்லை; ஆகாரமுமில்லை; ஆயுதங்களுமில்லை; அவன் ஓரிடத்தனு மல்லன்; ஆகிலும் பக்தர்களுக்கிரங்கி, பல புருஷரூபமாக ப்ரகாசிக்கின்றுன்; இவ்வண்ணம் ப்ரமாணமுமுண்டு. அவனைப் பக்தர்கள் தர்சிக்கின்றனர் என்பது ஸத்யம். தர்சிப்பது கேவலம் தோற்றமோ, தாத்காலிக ஸத்யத்துடன் கூடிய விக்ரஹமோ என்பது யோசிக்கத்தக்கது.

இப்படி, ப்ரஸந்நனுய், ப்ரஸந்ந ஹ்ருதயரான நாரதர்க்கு முன் ஸேவைதந்த மஹாபுருஷனை நாரதர் தலைவணங்கி நமஸ்கரித்தார், பகவானும், "என்து தர்சநத்தில் ப்ரியங்கொண்டு, ஏகதர், த்விதர், த்ரிதர் முதலான மஹர்ஷிகள் இந்த ப்ரதேசத்துக்கு வந்தார்கள். அவர்கள் என்னைத் தர்சித்தார்களில்லை; ஏகாந்திகளில் ஶ்ரேஷ்டர்கள் தவிர, மற்றேர் எனைத் தர்சிக்கமாட்டார். நீர் ஏகாந்திகளில் உத்தமர். தர்மதேவதைகளுடைய க்ருஹத்தில் எனது உத்தமமான தநுக்கள் (சரீரங்கள், அவதாரங்கள்) உண்டாயிருக்கின்றன. அவர்களை நீர் என்றும் பஜிப்பீர்; வந்தவழியே அவ்விடம் செல்வீர்; உமக்கு ப்ரியமான வரத்தைக் கேளும்; நான் உம்மிடம் ப்ரஸந்நனு யிருக்கின்றேன்" என்றுரைத்தார். நாரதர்; "தேவ! தேவரீருடைய தர்சநத்தால் என்னுல் அநுஷ்டிக்கப்பட்ட தபஸ்ஸும், யமநியமாதிகளும் இப்போது ஸபலங்களாயின. ஸர்வதர்சியாய், ஸர்வமூர்த்தியாய், ஸநாதநனுய், மஹாப்ரபுவாயிருக்கும் தேவரீரைத் தர்சித்தேனென்பதே நான் பெற்றவரம்." என்று சொன்னுர். பிறகு பகவான் "நாரத! விளம்பிக்காமல் செல்வீர். ஏனெனில், அநிந்த்ரியர்களாய், ஆகாரமற்றவர்களாய், சந்த்ரவர்ச்சஸ்ஸுடன் கூடினவர்களாய் இருக்கும், இந்த எனது பக்தர்கள் எனை ஏகாக்ரசித்

தர்களாய் உபாஸிக்கின்றனர். இவர்களுக்கு உமது விளம்பத்தால் விக்நம் உண்டாகாமல் இருக்கவேண்டும். முன் ஏகாந்திகளா யிருந்து, ராஜஸ தாமஸ குணங்களை முற்றிலும் துறந்து, இவர்கள் ஸித்தர்களாய்ப் பரிணமித்தவர். ஸம்ஶயமின்றி இவர்கள் என்னிடம் ப்ரவேசிப்பார்கள். பஞ்சேந்த்ரியங்களுக்கு விஷயமாகாதவனாய், முக்குணங்களை அதிக்ரமித்தவனாய், எங்கும் நிறைந்த ஸாக்ஷியாய், ஸர்வலோகங்கட்கும் ஆத்மாவாய், பாஞ்சபௌதிக சரீரங்கள் நசிக்கையில் ஸ்வயம் நசிக்காதவனாய், பிறப்பற்றவனாய், நித்யனாய், ஶாஶ்வதனாய், நிர்குணனாய், நிஷ்களனாய், இருபத்திரண்டு தத்வங்களுக்குமேல் இருபத்தைந்தாவது தத்வமாக ப்ரஸித்தி யடைந்தவனாய், புருஷ ஶப்தவாச்யனாய், க்ரியா ரஹிதனாய், கேவலம் ஜ்ஞாநகம்யனாய், எவனையடைந்து த்விஜர்கள் முக்தர்களாகின்றனரோ அப்படிப்பட்ட ஸநாதநனும் பரமாத்மாவுமாய் இருக்கின்றவன் ஸ்ரீவாஸுதேவன். நாரத! அந்தப் பகவானுடைய மாஹாத்ம்யத்தையும் மஹிமையையும் பாரும். ஶுபாஶுப கர்மங்கள் யாவும் அவனை லேபிக்கமாட்டா. த்ரிகுணங்கள் ஸர்வசரீரங்களிலும் ஸம்பந்தித்து விவித க்ரியைகட்குக் காரணங்களாகின்றன. க்ஷேத்ரஜ்ஞன் அவற்றினுடைய போக்தாவாகின்றான். அவை அவனைப் புஜிக்கமாட்டா. அவன் நிர்குணனாய், குணங்களின் போக்தாவாய், குணங்களை ஸ்ருஷ்டித்து அவற்றை அதிக்ரமித்து நிற்கின்றான். ஜகத்ப்ரதிஷ்டையான ப்ருதிவீ, அப்பிலும், அப்பு ஜ்யோதிஸ்ஸிலும், ஜ்யோதிஸ் வாயுவிலும், வாயு ஆகாசத்திலும், ஆகாசம் மநஸ்ஸிலும், மநஸ் அவ்யக்தத்திலும் லயமடைந்தபின்பு, [‘ அவ்யக்தம் புருஷே ப்ரஹ்மந் நிஷ்க்ரியே ஸம்ப்ரலீயதே’] அவ்யக்தம் நிஷ்க்ரியனான புருஷனிடம் லயிக்கின்றது. ‘ நாஸ்தி தத்வாத் பரதர: புருஷாத்வை ஸநாதநாத் ॥ நித்யம் ஹி நாஸ்தி ஜகதி பூதம் ஸ்தாவரஜங்கமம் । ருதே தமேகம் புருஷம் வாஸுதேவம் ஸநாதநம் ॥ ஸர்வபூதாத்ம பூதோ ஹி வாஸுதேவோ மஹாபல: । ’ ஸநாதநனான புருஷனைக்காட்டிலும் மேற்பட்ட தொன்றுமில்லை. அந்த வாஸுதேவனை யன்றிக்கு ஜகத்தில் ஸ்தாவர ஜங்கம பதார்த்தமும் என்றுமிலது. ஏனெனில், ஸர்வ ஶக்தியான ஸ்ரீ வாஸுதேவன் ஸர்வ பூதங்களுக்குள்ளும் அந்தராத்மாவா யிருக்கின்றான். பஞ்ச

மஹா பூதங்களின் சேர்க்கை சரீரம். அதற்குள் ஜீவன் ப்ரவேசிக்காமல் ப்ராணன்கள் சேஷ்டிக்கமாட்டா. அத்ருஶ்யனாய், ஸூக்ஷ்மஶக்தி விஶிஷ்டனாய், வாஸுதேவன் யாவத் சரீரங்களிலும் ப்ரவேசிக்கின்றான். அப்போது பிறக்கின்றானென்பார்கள். ப்ரபுவானவன் அச்சரீரங்களைச் சேஷ்டிக்கச் செய்கின்றான். ஶேஷனென்றும் ஸங்கர்ஷணனென்றும் சொல்லப்பட்ட ப்ரபுவே ஜீவனெனப்படுகின்றான். அவனிடம் உத்பந்நனாய், ஸ்வதர்மத்தால் ஸநத்குமாரத்வத்தைப் பெற்றவனாய், மஹாப்ரளயத்தில் ஸர்வபூதங்களுக்கும் லயஸ்தாநமாய், ஸமஸ்த பூதங்களிடமும் மநஸ் எனும் தத்வமாயிருப்பவனே ப்ரத்யும்நனென்பார்கள். ஸ்தாவர ஜங்கம ரூபமாய் நிற்கும் ஸர்வ ஜகத்தும் எவனிடம் உண்டானதோ, ப்ரபஞ்சத்தில் ஸர்வகர்மங்களிலும் எவன் ப்ரகாசிக்கின்றானோ, அப்படிப்பட்ட ஸர்வகர்த்தாவும், காரணனும், கார்யமுமாயிருப்பவனே அநிருத்தனென்றும், ஈஶாநனென்றும், சொல்வார்கள். நிர்க்குண ஸ்வரூபியாய், க்ஷேத்ரஜ்ஞனென்று சொல்லப்பட்ட பகவான் வாஸுதேவனே, ஜீவனெனப்பட்ட ஸங்கர்ஷணனென்று அறியத்தக்கவன். ஸங்கர்ஷணனிடம் ப்ரத்யும்நன் ஆவிர்ப்பவிக்கின்றான். அவனே மநஸ்ஸாவதாகச் சொல்லப்படுகிறான். ப்ரத்யும்நனிடம் அநிருத்தன் ஆவிர்பவிக்கின்றான்; அவனே அஹங்காரம்; அவனே ஈஶ்வரன். நாரத! ஸ்தாவர ஜங்கமரூபமான ஸர்வஜகத்தும், அதனிடம் உள்ள ஸத்தென்றும் அக்ஷரமென்றும், அஸத்தென்றும் க்ஷரமென்றும் சொல்லப்பட்ட யாவத் வஸ்துக்களும் என்னிடம் உண்டாகின்றன. எனது பக்தர்கள் என்னிடம் ப்ரவேசித்து முக்தர்களாகின்றார்கள். என்னை இருபத்தைந்தாவதான நிஷ்க்ரிய னெனப்பட்ட புருஷனென்று அறிவீர்; நான் நிஷ்களன் குணமற்றவன் த்வந்த்வாதீதன் பரிக்ரஹமில்லாதவன்; மேலே விவரித்தபடி என் ஸ்வரூபம் உமக்குத் தெரியாது; எனை நீர் ரூபவானைப்போல் தர்சிக்கின்றீர். இந்த ரூபத்தை நான் இச்சித்தால் ஒரு முகூர்த்தத்தில் நாசம் செய்வேன். நான் ஈஶ்வரன்; ஜகத்துக்கு நான் குரு. நீர் தர்சித்த எனது ரூபமானது, என்னால் ஸ்ருஷ்டிக்கப்பட்ட எனது மாயை; ஸர்வபூதங்களுடைய குணங்களுடன் கூடியது. இவ்வண்ணம் நீர் எனை அறியத்தகாது. எனது வ்யூஹசதுஷ்டயங்கள் என்னால் உமக்கு நன்றாகத் தெரிவிக்கப்பட்டன. ஜீவன் எனும் ஸம்ஜ்ஞை

என்னுடையது; என்னிடம் ஜீவன் நிலைகொள்கின்றான். ஆனால் கேவல ஜீவனைத் தர்சித்ததாக உமக்கு யோசனை உண்டாகவேண்டாம். நான் எங்கும் உள்ளவன்; ஸர்வ ப்ராணிகட்கும் நான் அந்தராத்மா. ப்ராணிவர்க்கங்களுடைய சரீரங்கள் நசிக்கும்போது நான் நாசமடைவதில்லை. இந்த மஹாபாக்யஶாலிகளான புருஷர்கள், எனது ஏகாந்த பக்தியில் ஸித்தியடைந்து, ராஜஸ தாமஸ குணங்களை முற்றும் துறந்தவர்கள். பின்னால் எனை அடையப் போகின்றார்கள்; காரணம், கார்யம், கர்த்தா மூன்றும் நானே; லோகாதியாய், சதுராநநனாய், நிருக்தங்களால் அறியக்கூடாதவனாய், ப்ரஹ்மா வெனப்பட்டவனாய், ஸநாதநனான தேவனாய் இருக்கும் ஹிரண்யகர்ப்பன், எனது கார்யங்களைப்பற்றிச் சிந்திக்கின்றான். ருத்ரன் எனது க்ரோதத்தால், எனது லலாட ப்ரதேசத்தினின்று உண்டானவன். ஏகாதச ருத்ரர்களை எனது வலப் பக்கத்திலும், த்வாதசாதித்யர்களை எனது வாமபார்ஶ்வத்திலும், அஷ்டவஸுக்களை எனது முன் புறத்திலும், நாஸத்ய ஊஸ்ரர்களை எனது பின் புறத்திலும் பார்ப்பீர். ஸர்வ ப்ரஜாபதிகளையும், ஸப்த ருஷிகளையும், வேதங்களையும், ஶதஸங்க்யாகங்களான யஜ்ஞங்களையும், அம்ருதத்தையும், ஓஷதிகளையும், ஸர்வ தபஸ்ஸுக்களையும், யமநியமாதிகளையும் என்னிடம் பார்ப்பீர். அஷ்டைஶ்வர்யங்களும் ஒன்றுகூடி மூர்த்தீகரித்து என்னிடம் விளங்கக் காண்பீர். ஶ்ரீயும், லக்ஷ்மீயும், கீர்த்தியும், ப்ருத்வியும், வேதமாதாவான ஸரஸ்வதியும் என்னிடம் ப்ரகாசிக்கப் பாரும். ஆகாசத்தில் ஸஞ்சரிக்கும் ஜ்யோதிஸ்ஸுக்களில் ஶ்ரேஷ்டனான த்ருவனை என்னிடம் பாரும். ஸமுத்ரங்களையும், நதிகளையும, தடாகங்களையும், மூர்த்தீகரித்த நான்கு பித்ருகணங்களையும், என்னிடம் பாரும். ரூபமற்ற த்ரிகுணங்களை என்னிடம் காண்பீர். தேவ கார்யங்களைக்காட்டிலும் பித்ருகார்யங்கள் விசேஷித்தன; ஸர்வ தேவ பித்ருக்களுக்கும் நான் முதல்வனான ஒரே பிதா. வடமேற்கு ஸமுத்ரத்தில் ஹயக்ரீவனாய் நின்று ஶ்ரத்தையோடு ஸமர்ப்பிக்கப்பட்ட ஹவ்யகவ்யங்களை நான் பாநம் செய்கின்றேன். பூர்வத்தில் என்னால் ப்ரஹ்மா ஸ்ருஷ்டிக்கப்பட்டார்; யஜ்ஞ மூர்த்தியான எனை உத்தேசித்து யஜ்ஞங்கள் செய்து ஆராதித்தார்; அவரிடம் நான் ப்ரஸந்நனாய் அவர்க்கு உத்தமவரங்களை யளித்தேன்; கல்பாரம்பத்தில் அவர் எனது புத்ரனானார்; லோகாத்

யக்ஷத்வத்தைப் பெற்றார்; அஹங்கார க்ருதங்களான நாமங்களைத் தம்மால் ஸ்ருஷ்டங்களான பதார்த்தங்களுக்கு அளித்தார். "உம்மால் ஏற்படுத்தப்பட்ட மர்யாதைகளை எவனும் அதிக்ரமிக்கமாட்டான். வரங்களை அபேக்ஷிப்பவர்க்கு நீரே வரப்ரதர் ஆகப்போகின்றீர். ஸுராஸுர கணங்கட்கும், ருஷிகட்கும், பித்ருக்களுக்கும், ஸர்வப்ராணிகட்கும் நீர் உபாஸ்யர் ஆகப்போகின்றீர். ஸுரகார்ய நிமித்தமாக நான் பலதரம் அவதரிப்பேன். அப்போது பிதா புத்ரனைப்போல் நீர் என்னை அநுஶாஸநம் பண்ணுவீர்" என்று இவ்விதமாகப் பல வரங்களை ப்ரஹ்மாவுக்குக் கொடுத்தேன். இவ்வண்ணம் ருத்ரனுக்கும், மநுவுக்கும், இந்த்ரனுக்கும், ப்ரீதியுடன் நான் வரங்கள் தந்தேன். பிறகு நிவ்ருத்தி மார்க்கத்தில் நின்றேன். ஸர்வ தர்ம த்யாகம் பரமமான நிவ்ருத்தியெனப்படுகின்றது. ஸாங்க்ய ஜ்ஞாந நிஶ்சயமறிந்த ஆசார்யர்கள், ஆதித்யனிடம் ஸநாதநனாய், வித்யா ஸஹாயவானாய், இருக்கின்ற கபிலர் என்று என்னை சொல்வார்கள். சந்தஸ்ஸுக்களில் ஸ்துதிக்கப்பட்ட ஹிரண்யகர்ப்பனும் நானே. யோகஶாஸ்த்ரங்களில். யோகமார்க்க ப்ராப்யனாக என்னையே சொல்லப்படுகிறது. நித்யவிபூதியில ரூபவானாக நான் ஶாஶ்வதமாய் நிற்கின்றேன். ஸஹஸ்ர யுகமுடிவில் ப்ரபஞ்சத்தை எனக்குள் அடக்கப்போகின்றேன். சராசர ரூபஸர்வபூதங்களையும் எனக்குள் அடக்கிக்கொண்டு, கேவல வித்யா ஸஹாயவானாய் ஏகாகியாய் நான வர்த்திப்பேன். அவ்வித்யையைக்கொண்டே மறுபடி ஜகத் ஸ்ருஷ்டியைச் செய்வேன. எனது துரீயமூர்த்தியான வாஸுதேவனிடம் ஶேஷனெனும் ஸங்கர்ஷணனும், அம்மூர்த்தியினின்று ப்ரத்யும்நனும் ஆவிர்ப்பவித்தனர். ப்ரத்யும்நனிடம் நானே அநிருத்தனாக ஆவிர்ப்பவித்தேன். இவ்விதமான எனது ஸ்ருஷ்டி அடிக்கடி நடக்கின்றது. அநிருத்தனுடைய நாபீ கமலத்தினின்று ப்ரஹ்மா உண்டாகின்றார். ப்ரஹ்மாவினிடம் ஸர்வப்ராணிவர்க்கங்களும் ஸர்வ சராசரங்களும் உத்பவிக்கின்றன. ஒவ்வொரு கல்பத்திலும் இந்த ரூபமான ஸர்க்கமுண்டு. ஸ்ருஷ்டி லயங்கள் ஸூர்யோதயாஸ்தமநங்களைப்போல தொடர்ந்து நடக்கின்றன" என்றிவ்வண்ணமாகப் பரமேஶ்வரன் நாரதர்க்கு ஹிதோபதேசம் செய்தார். பிறகு நாரதர்க்குப் பகவான் ஸ்வாவதார விசேஷங்களைப்பற்றிச் சொன்னார். அங்கே ஶ்ரீராமாவதாரம் த்ரே

தாயுக த்வாபரயுக ஸந்தியிலும், ஸ்ரீ க்ருஷ்ணவதாரம் த்வாபர் கலி ஸந்தியிலும் நடந்ததாகச் சொல்லப்பட்டிருக்கிறது. இன்னும், கலி கோலாஹலங்கள் தத்காலம் ப்ரகாசிக்கின்றபடியே விவரிக்கப்பட்டிருக்கின்றன. அதன் பிறகு பகவான் அந்தர்தானத்தை யடைந்தார். நாரதரும், நரநாராயணாஸ்ரமத்துக்கு மறுபடி வந்துசேர்ந்தார்.

இந்த உபாக்யாநமானது "ஐ஡ம்8ஹொவநிஷஃம் வது வெ஡ஃ ஸ8நீ்வதம் । ஸாம்வ்யயொம க்ரு தம்தெ௩நவம்ஶரா த்ரா நு ஶஸ்ஷிதம் ॥ நாராயண 8௰வொதீதம் நாரஜொாs ஶ்ரா வய த்வு நஃ । ஶ்ர ஹ்ஜணஃ ஸஃநெ தாத யமாஷ்ரஷ்டம் யமாஶ்ரு தம் ।" என்று முடிகின்றது. இதனல் யஜ்ஞத்யாஜிகள் ஏகாந்திகள் என்று சொல்லப்பட்ட ஸாத்வதர்களுடைய ஸம்ப்ரதாயமானது, வேதம், உபநிஷத், ஸாங்க்ய யோக ஸம்ப்ரதாயங்களோடு ஒத்ததென்று ஏற்படுகின்றது. அதற்குப் பாஞ்சராத்ர மென்று பெயர். மரீசி முதலான ஸப்தருஷிகள் லக்ஷம் க்ரந்த விஸ்தார முள்ளதாக அதை முதலில் வெளிப்படுத்தினர்கள். அந்த ஸம்ப்ரதாயம் பிற்காலங்களில் ப்ருஹஸ்பதியாலும் உபரிசரவஸு வெனும் ஸம்ராஜனலும் அநுஷ்டிக்கப்பட்டுப் பின் நஷ்டத்தை யடைந்தது. அதனுடைய ஸங்க்ரஹமானது க்ஷீராப்தி நிகேதநனல் நாரதர்க்கு மேலே விவரித்தபடியே உபதேசிக்கப்பட்டதாக மஹாபாரதத்தில் சொல்லப்படுகின்றது. இந்த அத்யாய ஶ்லோகமும் ஸ்ரீ சங்கராசார்யருடைய ஸூத்ர பாஷ்யத்தில் ப்ரமாணத்வேந எடுத்துக் காட்டப்பட்டது. இந்த அத்யாய தத்வத்தை நாரதர் ப்ரஹ்மாவினுடைய ஸ்தாநத்தில் இருக்கின்ற இருபத்தெண்ணுயிரம் ஷித்தர்களுக்கு உரைத்தாரென்று மோக்ஷதர்மத்தில் சொலலப்படுகின்றது. ஸ்ருஷ்டி ஸ்திதி லயரூபமான அநந்த கல்பங்கள் கழிந்தன; மீண்டும் நடக்கப்போகின்றன. ஒவ்வொரு கல்பாதியிலும், நாராயணன் ஸ்ருஷ்டியின் பொருட்டு ப்ரஹ்மாவை ஸ்மரிக்கின்றூர். அந்த ப்ரஹ்மாவுக்குப் பரமாத்ம தத்வம் முழுதும் தெரியும். அவர்க்குத் தெரியாத விஷயத்தை நாரதர் வெளியிட்டபடியன்று. இதைப்

பிறகு ஸூர்யன் அறிந்தார். அவரிடம் ஸூர்யாநுகாமிகளான ருஷிகள் உபதேசம் பெற்றனர். அவர்கள் மேருபர்வதத்தில் தேவர்களுக்குச் சொன்னார்கள். தேவர்களிடம் இந்த விஷயத்தை அஸிதர் பெற்றார். அவரிடமிருந்து பித்ருதேவதைகள் அறிந்தார்கள். பீஷ்மர் அதை ஶந்தநுவிடம் கேட்டறிந்தார். 'ஐஃ ஊவ்யாநூஷெ—ியம் வாஸம்வய—ா ஶதம்நூவ । நாவாஸ—ஷெ வாஹஜாய கூயாஜெயம் கயூம்வந' என்று பீஷ்மர் அதைப் பரம்பரா ப்ராப்தமென்று தர்மபுத்ரர்க்குச் சொன்னார். இன்னும் 'ஶெத்தாந்யாநிவதொஜாநு உவாவ்யாந ஶதாநிவெ । யாநி ஶ்ரூதாநி ஸவ—ாணி தெஷாம் ஸாரொ யஊஜ்ஞதஃ' என்று மஹாபாரதத்தில் கண்ட ஸர்வோபாக்யாநங்களைக் காட்டிலும் இது ஸாரதமம் என்று பீஷ்மர் உரைத்தார். ஸுராஸுரர்கள் திருப்பாற்கடலைக் கடைந்து அம்ருதத்தை ஸம்பாதித்ததையொத்து, வித்வாங்களால் இந்த உபாக்யாநம் ஸாரதமமாக எடுக்கப்பட்டதென்றும், இதைப் படிப்பவர்களும் கேட்பவர்களும் ஏகாந்த பாவத்தையடைந்து, ஐகாந்த்யத்தில் நிலை கொண்டார்களாகில், ஶ்வேத த்வீபத்தில், சந்த்ரப்ரபா யுக்தர்களாகி, ஸாக்ஷாத்பகவானை யடைவார்களென்று இவ்வுபாக்யாநம் முடிகின்றது. 'ஸ்வா விஸதம் ராஜநு கஹ்யவ்—ஃ வாஸஷெதூஃ । ஸஹிாதா விதாவெவ க்ருதஸ்ய ஜமதொஶஸஃ ॥ ஶ்ரஹ்ணஷெவொ ஜமவாநு வீரயதாம்தெவஸநாதநஃ' என்று பீஷ்மர் தர்மபுத்ரர்க்கு ஹிதம் சொல்லிமுடித்தார். அதாவது, ஸர்வஜகத்துக்கும் மாதாவாயும் பிதாவாயுமிருக்கின்ற புருஷோத்தமன் ஸதா அர்ச்சிக்கத் தக்கவன்; அவன் உன்னிடம் ப்ரீதனாகட்டும் என்றபடி. வ்யாஸர் ஸதா அஷ்டாக்ஷரஜபம் செய்துகொண்டிருந்தாரென்றும், ஸ்வாஶ்ரமத்தினின்று அந்தரிக்ஷ மார்க்கமாக அடிக்கடி க்ஷீராப்திக்குச் சென்று பகவானை ஆராதித்துத் திரும்பிவந்தனரென்றும், பாண்டவர்கள் நாராயண பரர்களாய்ப் போந்து ஸதா பகவானைப் பூஜித்தனரென்றும் வைஶம்பாயநர் முடிவில் ஜநமே ஜயனுக்கு உபதேசித்தார்.

ஸ்ரீ:.

ஸ்ரீமதே வேதாந்தராமாநுஜ மஹாதேசிகாய நம:.

ஸ்ரீமதே லக்ஷ்மீ ஹயவதந பரப்ரஹ்மணே நம:.

# ஸித்த நிரூபணம்.*

(தொடர்ச்சி.)

இப்படிப்பட்ட பக்திப்ரபத்தி மார்க்கத்தில் ப்ரவ்ருத்திக்கைக்கு ஏன் இவ்வளவு ஸுக்ருதம் அபேக்ஷிதமென்னில், கீழ்ச் சொன்ன எட்டு அதிகாரிகளில் ஆஸ்திகனை முதல் அதிகாரியாக வருகிறதற்குக் கீழே நாஸ்திகர்களில் ஆறுபடி இருக்கிறது. ஸ்தாவர திர்யக் ஜந்மங்களினின்றும் பாகவதர்களுக்கு நிழல் கொடுக்கை, பாகவதோச்சிஷ்ட பக்ஷணங்களாகிற ஸுக்ருதங்களால் துர்லபமான மநுஷ்யதேஹம் கிடைத்தபோதிலும் அதில் பௌத்தர்களுக்குள் ஸூந்யவாதி மதத்தில் ஜநித்து, சேதநா சேதநேஸ்வரரூப தத்வத்ரயத்தையும் வேத ப்ராமாண்யத்தையும் அபலபித்து, ப்ரபஞ்சத்தில் மித்யாத்வ புத்தியும் அபாவத்தில் ஸத்யத்வ புத்தியும் மோக்ஷஹேது வென்றும் அபாவாபத்தி மோக்ஷமென்றும் சொல்லுகிறார்கள். இப்படியே இனிச் சொல்லப்படும் மதஸ்தர்களும் தங்கள் குலத்தில் பிறந்தவர்களும் தங்களுடன் ஸஹவாஸம் பண்ணினவர்களும் தங்களுடைய மதத்தைக்கொண்டாடி வந்தனர்.

கீழ்ச் சொன்னவர்களில் இரண்டாவது யோகாசாரர்கள். ஆத்மாவை ஜ்ஞாநரூபமாக ஒப்புக்கொண்டு 'பாஹ்யார்த்தஸத்வ ஜ்ஞாநஸஹிதாத் க்ஷணிகத்வ ஜ்ஞாநம் ஜ்ஞாநஸந்தத்யுச்சேதரூபமோக்ஷஹேது:' என்றார்கள்.

---

* இது, சென்ற மார்கழிமீ - ல் பூவிருந்தவல்லியில் நடந்த ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த மஹாஸபையில் எட்டாவது வார்ஷிக மஹாஸங்கத்தில் சதுஸ்ஸாஸ்த்ர வேதகல்பதரு ஸ்ரீ. உ.வே. திருக்குடந்தை சேஷாசார்ய ஸ்வாமியால் செய்யப்பட்ட உபந்யாஸம்.

மூன்றாவது ஸௌத்ராந்திகர்கள், பாஹ்யார்த்தத்தில் அநுமேயத்வ புத்தியும் ஆத்மாவில் க்ஷணிகத்வ புத்தியும் மோக்ஷஹேதுவென்கிறார்கள்.

நான்காவது வைபாஷிகர்கள். பாஹ்யார்த்தங்கள் ப்ரத்யக்ஷவேத்யமாகிலும் அதிலும் ஆத்மாவிலும் க்ஷணிகத்வபுத்தி, 'ஜ்ஞாநஸந்தாநோச்சேதோ மோக்ஷஹேது:' என்றார்கள்.

ஐந்தாவது சார்வாகர்கள். பஞ்சபூதமயமாயும் ஷிரஸ்தாயியுமான ஶரீரமே ஆத்மாவென்றும், பஞ்சபூதமயத்வஜ்ஞாநம் ஶரீரநாஶரூப மோக்ஷத்திற்கு ஹேதுவென்று சொன்னார்கள்.

ஆறாவது ஜைநர்கள். தப்தஶிலாரோஹணம், கேஶோல்லுஞ்சநம் இவைகளே நித்யம் உயரப்போவதாகிற மோக்ஷத்திற்கு ஹேதுவென்றார்கள்.

ஆஸ்திகர்களில் முதலாவது, நிரீஶ்வர ஸாங்க்யர்கள். இவர்கள், வேதோக்த தர்மங்களை மாத்ரம் அங்கீகரித்து, ஈஶ்வராபலாபநம் பண்ணி, புருஷனுக்கு 24-தத்வரூபமான ப்ரக்ருதியைக்காட்டிலும் வைலக்ஷண்யஜ்ஞாநம், ஸ்வயம்ப்ரகாஶ ஜீவாத்ம ஸ்வரூபாவஸ்திதி ரூபமோக்ஷத்திற்கு ஸாதநமென்கிறார்கள்.

இரண்டாவது காணாதர்கள். ப்ருதிவ்யாதி பஞ்சபூதங்கள், காலம், திக்கு, மநஸ், இந்த த்ரவ்யங்கள், குணம், கர்ம, ஸாமாந்யம், விஶேஷம், ஸமவாயம், அபாவம் இந்த 14-பதார்த்தங்களைக் காட்டிலும் ஆத்மாவுக்கு பேதஜ்ஞாநம் பாஷாண கல்பஜீவாத்மாவஸ்தித ரூபமோக்ஷத்திற்கு ஸாதநமென்கிறார்கள்.

மூன்றாவது நிரீஶ்வர மீமாம்ஸகர்கள். யாகாதிகளாலேயே ஸ்வர்க்கரூப மோக்ஷ ப்ராப்தியே தவிர மோக்ஷம் வேறில்லையென்கிறார்கள்.

நான்காவது யோகமதஸ்தர்கள். யமநியமாதி பூர்வக ஈஶ்வரத்யாநரூப யோகத்தினால் அணிமாதி அஷ்டைஶ்வர்யரூப மோக்ஷப்ராப்தி என்கிறார்கள்.

ஐந்தாவது வேதாந்திகளில் அத்வைத மதஸ்தர்கள். வைகுண்டம் அண்டத்திற்குள்ளிருக்கிறதென்றும், அதில் இருக்கிற பகவானை அடைவதற்கு ஸகுணோபாஸந ரூப பக்தி ஸாதநமென்றும், அதற்கு மேற்பட்டது நிர்க்குண ப்ரும்ஹைக்யப்ராப்தியென்றும், அது இங்கேயே ஸித்திக்கிறதென்றும், அதற்கு

322



'தத்வமஸி' என்கிற வாக்யஜந்ய ஆத்மப்ருஹ்மைக்ய ஜ்ஞாநம் ஸாதநமென்றும் சொல்லுகிறார்கள்.

ஆறுவது த்வைத மதஸ்தர்கள். 'சதுர்விதா பஜந்தே மாம் ஜநா: ஸுக்ருதிநோர்ஜுந। ஆர்த்தோ ஜிஜ்ஞாஸுரர்த்தார்த்தீ ஜ்ஞாநீ ச' இத்யாதிகளில் சொல்லிய அஷ்ட வித பக்தியினால் சதுர்முகனுக்கு ஸர்வகுண விஶிஷ்ட ப்ருஹ்ம ப்ராப்தி யென்றும், மற்றவர்களுக்குத் தாங்கள் எத்தனை குண விஶிஷ்டமாக ப்ருஹ்மத்தை உபாஸித்தார்களோ, அத்தனை குணத்துடன் மாத்ரம் கூடின ப்ரஹ்மாநுபவமென்றும், உபாய தாரதம்யத்தாலும் அதிகாரி தாரதம்யத்தாலும் முக்தி தாரதம்ய முண்டென்றும் சொல்லுகிறார்கள். இப்படி ஆஸ்திகரில் 6-ப்ரகாரமும், நாஸ்திகரில் 6-ப்ரகாரமும் இருக்கிறார்கள்.

ஆஸ்திகர்களான வேதாந்திகளும் பகவத் ப்ராப்தியை அங்கீகரித்து, அது பக்த்யாதிகளுக்கு அங்கமென்றும் சொல்லுகிறார்கள். இவ்வித மதங்களினின்றும் ஸகல ஶ்ருதி ஸ்ம்ருதீதிஹாஸ புராண பஞ்சராத்ராத்யைககண்ட்ய ப்ரகாஶகமான ஸ்ரீ விஶிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தில் ப்ரவேஶிப்பதற்கு 'பஹூநாம் ஜந்மநாமந்தே' என்கிறபடியே அநேக ஜந்ம ஸுக்ருதங்கள் ஸாதநமாகின்றன. இப்படி ஸாமாந்யமாய் ஸர்வஹிதமும் தத்தந்மதாஸாதாரணமான ஹிதமும் நிரூபிக்கப்பட்டன. இனி விஶிஷ்டாத்வைத ஸித்தாந்தத்தில் நிர்ணயிக்கப்பட்ட முமுக்ஷுக்களின் ப்ரதாநமான ஹிதம் நிரூபிக்கப்படுகிறது.

இந்த ஹிதமானது 'பக்த்யா பரமயா வாபி ப்ரபத்த்யா வா மஹாமதே। ப்ராப்யோஹம் நாந்யதா ப்ராப்யோ மம கைங்கர்யலிப்ஸுபி:॥' என்று பகவான் அருளிச்செய்தபடியே பக்தியென்றும் ப்ரபத்தி யென்றும் இருவகையா யிருக்கிறது. இதில் பக்தி யோக கர்மயோக ஜ்ஞாநயோகங்களினால் யோகமுகத்தாலே உண்டாகிற ஜீவாத்ம ஸ்வரூப ஸாக்ஷாத்காரத்தை அதிகாரமாகவுடையதாயும், வர்ணாஶ்ரம தர்மாதிகளையும் யமநியமாதி ஸஹித பகவத் திவ்யமங்கள விக்ரஹ சிந்தந ரூபதாரண பர்யந்தமான ஸப்தாங்கங்களையும் ஶமதமாதிகளையும் பரிகரமாக வுடையதாயும்,

ஆப்ரயாணுவர்த்தமாநமுமான தைல தாராவதவிச்சிந்ந ப்ரீதி ரூபாபந்ந தர்ஶந ஸமாநாகார த்யாந ஸந்ததி விஶேஷம்.

ப்ரபத்தியாவது, ஸ்ரீமந்நாராயணனிடத்தில் அங்க பஞ்சக ஸம்பந்நமான ஆத்மரக்ஷாபர ஸமர்ப்பணம். இவற்றின் விஶேஷங்களை ஸ்வஸ்வாசார்ய ஸகாஶத்தில் உபதேசித்துக்கொள்ள வேண்டியது. பக்தியோகத்தில் ப்ரமாணமான ஶ்ருதிகள், 'தமேவம் வித்வாந் அம்ருத இஹ பவதி - விஜ்ஞாய ப்ரஜ்ஞாம் குர்வீத - ஸத்வஶுத்தௌ த்ருவா ஸ்ம்ருதிஃ । க்ஷீயந்தே சாஸ்ய கர்மாணி தஸ்மிந் த்ருஷ்டே பராவரே । த்ரஷ்டவ்யஃ ஶ்ரோதவ்யோ மந்தவ்யோ நிதித்யாஸிதவ்யஃ - யமேவைஷ வ்ருணுதே தேந லப்யஃ - ப்ரயாணாந்தே ஓங்காரம் அபித்யாயீத - விவிதிஷந்தி யஜ்ஞேந தாநேந தபஸாऽநாஶகேந. ஶாந்தோ தாந்த உபரதஸ்திதிக்ஷுஃ' இத்யாதிகள். ப்ரபத்தியில் ப்ரமாணமான ஶ்ருதிகள், 'முமுக்ஷுர்வை ஶரணமஹம் ப்ரபத்யே', 'ஓமித்யாத்மாநம் யுஞ்ஜீத', 'தஸ்மாந் ந்யாஸமேஷாம் தபஸாமதிரிக்தமாஹுஃ', 'த்யாஸாதிவிவஸ்யம் ப்ரவணம் ந ப்ரதிப்ரயச்சதி', 'ப்ரணவோ தநுஃ ஶரோ ஹ்யாத்மா ப்ரஹ்ம தல்லக்ஷ்யமுச்யதே । அப்ரமத்தேந வேத்தவ்யம் ஶரவத் தந்மயோ பவேத் ॥' 'ஸர்வஸ்ய ஶரணம் ஸுஹ்ருத்' இத்யாதிகள். இப்படியே ஸ்ம்ருதீதிஹாஸ பகவத் கீதாபுராண பஞ்சராத்ராசார்ய திவ்ய ஸூக்திகளிலும் இவைகள் விஸ்தரிக்கப்பட்டிருக்கின்றன. இவற்றில் ஶக்தரும் விளம்பாக்ஷமருமான த்ரைவர்ணிகர்கள் பக்தி யோகாதிகாரிகள். அஶக்தரும் விளம்பாக்ஷமருமான ஆஸ்திக ஸர்வ சேதநர்களும் ப்ரபத்யதிகாரிகள். இது, ஶ்ருதி ப்ரதிநிதியான ஸ்ரீ பாஞ்சராத்ரத்தில் லக்ஷ்மீ தந்த்ரம் முதலிய அநேக ஸம்ஹிதைகளில் ஸபரிகரமாக நிரூபிக்கப்பட்டிருக்கிறது. இது ஓர் ஶரணாகதி வேதம். இதில் அபய ப்ரதாந ப்ரகரணம் உபநிஷத் பாகம் என்று ஸ்ரீமந்நிகமாந்த மஹாதேசிகனால் கொண்டாடப்பட்டதும், ஸ்ரீ காயத்ரீ வ்யாக்யாந ரூபமான ஸ்ரீமத் ராமாயணத்தில் ஸ்ரீ வால்மீகி பகவானால் பக்த்யநுஷ்டாதாக்

களான வஸிஷ்ட பாரத்வாஜ ஶரபங்க கௌதமாகஸ்த்ய மஹர்ஷி ப்ரப்ருதிகளுடைய சரித்ரத்தால் பக்தியும், ப்ருஹ்மாதி தேவதைகள், ஸ்ரீ பரதாழ்வான், தண்டகாரண்யவாஸி மஹர்ஷிகள், ஸ்ரீ ஸுக்ரீவ மஹாராஜர், ஸ்ரீ ஸீதாபிராட்டி, த்ரிஜடை, ஸ்ரீ விபீஷணாழ்வான், அயோத்யா வாஸிகள் முதலானவர்களுடைய அநுஷ்டாந முகத்தாலும், 'ஸக்ருதேவ ப்ரபந்நாய' இத்யாதி பகவத் வாக்யத்தாலும் ஸப்த காண்டங்களிலும் அடைவே விஸ்தாரமாக ப்ரபத்தியும் நிரூபிக்கப்பட்டது. ஸ்ரீ ஆளவந்தாரால் 'நிரமமீத புராண ரத்ந'மென்று கொண்டாடப்பட்டதும், ஸ்ரீ விஷ்ணுஷடக்ஷர வ்யாக்யாந மாகையாலே ஆறு அம்ஶங்களோடு கூடினதும், 'விஷ்ணோஸ்ஸகாஶாதுத்பூதம்' என்று விஷ்ணு ஶப்த நிர்த்தேஶமுள்ளதுமான ஸ்ரீ விஷ்ணுபுராணத்தில் புலஸ்த்ய வஸிஷ்ட வரப்ரதாந லப்த லக்ஷ்மீ விஶிஷ்ட நாராயணோபாயத்வ ப்ராப்யத்வரூப பரதேவதா பாரமார்த்ய ஜ்ஞாநரான ஸ்ரீ பராஶர ப்ருஹ்மர்ஷியும் பக்தி ப்ரபத்யுத்தேஶ்யர்களாய்க்கொண்டு ஸித்தோபாய பூதர்களான பெரியபிராட்டியாருடையவும் ஸ்ரீமந்நாராயணனுடையவும் ஸர்வஸ்மாத் பரத்வ ததுபயுக்த ஜகத்காரணத்வ ஸர்வஜ்ஞத்வ பரமகாருணிகத்வ பக்தி ப்ரபத்தி வஶீகார்யத்வ ஸர்வ பலப்ரதத்வாதிகளை நிரூபித்து, ஆறாவது அம்சத்தில் 'கலௌ ஜகத்பதிம் விஷ்ணும் ஸர்வஸ்ரஷ்டாரமீஶ்வரம் । நார்ச்சயிஷ்யந்தி மைத்ரேய பாஷண்டோபஹதா ஜநா: ।' இத்யாதிகளால் கலியுகத்தில் தத்வ ஜ்ஞாந மஹாவிஶ்வாஸ பூர்வக பகவத் ப்ரபத்தி ததாராதநாதிகளைச் செய்யுமவர்கள் அதிஸ்வல்பர்களென்றும் மஹாவிஶ்வாஸம் துர்லப மென்றும் விஸ்தீர்ணமாக நிரூபித்தார்.

ஸ்ரீமதஷ்டாக்ஷர வ்யாக்யாந மாகையாலே "நாராயணாத்து காசைவா நாராயண பராவேதா:' இத்யாதி நாராயண ஶப்த நிர்த்தேஶத்தாலே, பகவானுக்குப் பரத்வ காரணத்வோபாஸ்யத்வ ப்ரபத்தவ்யத்வாதிகளை ப்ரதிபாதிக்கிற பஞ்சம வேதமாகிற

ஸ்ரீமந் மஹாபாரதத்தில் பகவதவதாரமான ஸ்ரீ வ்யாஸ மஹர்ஷியினால் ராஜஸூயயாக ப்ரகரணத்தில் பரதேவதா பாரமார்த்யமும் மஹர்ஷிகளுடைய சரித்ரோபாக்யாநங்களாலே பக்திஸ்வரூபமும், 'த்ருளவத்யா ஸஹிதாஸ்ஸ்வெ நஸ்ருக்ஷ ஜநாத நம்' இத்யாதிகளாலும் ஸ்யேந கபோதியாத்யநேகோபாக்யாநங்களாலும் ப்ரபத்தியும், ஸாக்ஷாத் பகவதுபதிஷ்டமான ஸ்ரீகீதையினாலும் அநுகீதையினாலும் கர்மயோக ஜ்ஞாநயோக ஜநிதாத்மாவலோகந பரிகர்மித ஸபரிகர பக்தியோகமும் 'ஸோஹிவாயவ்யு வாஸ்ரித்யயெவிஸ்யு: வாவயொநய: । ஷ்ரியொவெஸ்யா ஷ்யா ஸஊத்ராஸ்ஸ்வியாஸிவாஸாம்கதிம்' இத்யாதிகளாலும் சரமஸ்லோகத்தாலும் ப்ரபத்தியும் மோக்ஷதர்மம் திருநாராயணீயத்தில் 'ப்ரஹ்மஸோப்ரஹ்வாரீவ வாநவ்யொஸாயஹிக்ஷக: । யஜெவஸ்வஸிஸிஸோஸ்ஸாதம் ஜெவதாம்காம்யஜெதவஸ: ॥' என்று உபக்ரமித்துப் பரமைகாந்திகளுடைய பாஞ்சகாலிகாராதநங்களும் ஸாங்க்யாநுஸாவிகாஸ்வமேதாதிகளில் விஸதமாக வர்ணஸ்ரம தர்மங்களும் நிரூபிக்கப்பட்டு, ப்ரஹ்மஸூத்ரத்தில் இவ்வர்த்தங்களெல்லாம் ஸங்க்ரஹமாக நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன.

ஸ்ரீத்வாதஸாக்ஷர வ்யாக்யாந மாகையாலே பன்னிரண்டு ஸ்கந்தமும் வாஸுதேவ ஸப்தத்தால் பரதத்வ ப்ரதிபாதகமான ஸ்ரீபாகவதத்தில் ஸ்ரீஸுகப்ரஹ்ம ரிஷியும் பக்தி ப்ரபத்திகளை விஸதமாக பஹு ஸ்தலங்களில் நிரூபித்து, பகவத்குண சேஷ்டிதாநுஸந்தாந ஜநிதமான பகவதநுபூஷாரூபமான பகவத் ப்ரீதிபூர்வகமாக பக்தி ப்ரபத்திகளையும் வர்ணஸ்ரம தர்மங்களையும் அநுஷ்டிக்கவேணுமென்றும் பாகவதாசார்ய பக்தி பர்யந்தமாக பகவத்பக்தியிருக்கவேண்டுமென்றும் நிரூபித்தார்.

(இன்னும்வரும்.)

ஸ்ரீ:.

ஸ்ரியை நம:.

ஸ்ரீமதே நிகமாந்த மஹாதேசிகாய நம:.

# ந்யாயபரிசுத்தி. *

(தொடர்ச்சி.)

11. அநுமாநாத்யாயத்தில், ஆரம்பத்தில் அநுமாநத்திற்கு லக்ஷணமும் அதன் ப்ராமாண்யமும் நிரூபிக்கப்பட்டிருக்கிறது. பின்பு அநுமாநம் அப்ரமாண மென்றும், ப்ரமாணமெனக் கொண்டாலும், அது ப்ரத்யக்ஷாதிரிக்தமல்ல வென்றும் பேசும் சார்வாகன் முதலியவர்களைக் கண்டித்திருக்கிறார். பின்னர் வ்யாப்ய வ்யாபக நிரூபணத்வாரா வ்யாப்தியும் வ்யாப்தி க்ரஹத்துக்கு உள்ள உபாயமும் நிரூபிக்கப்பட்டன. இங்கு வ்யாப்தி க்ரஹத்துக்கு பூயோதர்ஶநம் ஆவஶ்யகம் என்று சொல்லிவிட்டு, தத்வரத்நாகரத்தில் சொல்லியபடி ஸக்ருத் தர்ஶநமாத்ரம் உபாயமாகமாட்டாது என்று ஸயுக்திகமாய்க் காட்டியிருக்கிறார். பின்பு, வ்யாப்தி விபாகமும், அதன் லக்ஷணமும், உபாதி ஸ்வரூபமும், அதன் பேதங்களும், அதற்குள்ள தூஷகத்வ ப்ரகாரமும் சிந்திக்கப்பட்டன. பிறகு ஹேது நிரூபணத்தை ஆரம்பித்து, வ்யாப்தியும் பக்ஷ தர்மத்தையும் அநுமித்யங்கங்களான ஹேதுரூபங்களென்றும், ஸாதாரணமாக நையாயிகர் சொல்லும் பஞ்சரூபங்களும் இவைகளின் ப்ரபஞ்சங்கள்தாம் என்றும் சொல்லிவிட்டு, அந்த ஐந்து ரூபங்களுக்கும் லக்ஷணமும் உதாஹரணமும் காட்டியருளுகிறார். பிறகு ஹேதுவைக் கேவலாந்வயி என்றும், அந்வய வ்யதிரேகி

* இது, சென்ற மார்கழிமீ-ல் பூவிருந்தவல்லியில் நடந்த ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபையின் எட்டாவது வார்ஷிக மஹாஸங்கத்தில் படிக்கும்பொருட்டு, ஸ்ரீ. உப. அபிநவபட்டபாண ராயம்பேட்டை க்ருஷ்ணமாசார்ய ஸ்வாமியால் எழுதியனுப்பப்பட்ட உபந்யாஸம்.

என்றும் பிரித்துவிட்டு, கேவலாந்வயிக்கு ப்ராமாண்யம் கிடையாது என்று சொல்லும் வாதீந்த்ராதிகளுடைய மதத்தை நிராகரிக்கிறார். மஹா ஸம்ரம்பத்தோடு கேவல வ்யதிரேகி ஹேதுவை நிராகரித்துவிட்டு, லக்ஷணத்தாலே இதர பேதஸாதந ஸ்தலத்தில் கேவல வ்யதிரேகி ஹேது இல்லையா என்று ஶங்கித்துக்கொண்டு, லக்ஷணமே இதர பேதரூபமாயிருக்க, தத்ஸாதநார்த்தம் அநுமிதிக்கு அவகாஶமில்லை யென்று ப்ரகரணத்தை உபஸம்ஹரிக்கிறார். இதோடு அநுமாநாத்யாய ப்ரதமாஹ்நிகம் முடிவுபெற்றது.

இரண்டாவது ஆஹ்நிகத்தில்—, அநுமாநத்தில் ஸ்வார்த்தம் பரார்த்தம் என்கிற பேதத்தை நிராகரித்துவிட்டு, பஞ்சாவயவ வாக்யத்தையும், பஞ்சாவயவங்களின் நியமத்தையும், இதிலுள்ள மதபேதத்தையும் நிரூபித்திருக்கிறார். பிறகு, கதா நிரூபணத்தில், வாத ஜல்ப விதண்டா ஸ்வரூபமும், கதாங்கங்களும், கதாஸ்வரூபமும் விவேசநம் செய்யப்பட்டன. பிறகு நிக்ரஹ ஸ்தாநத்தின் ஸாமாந்ய லக்ஷணம் கூறி, அதன் ஸங்க்ரஹ விபாகமும் விஸ்த்ருத விபாகமும் செய்து, ஒவ்வொன்றுக்கும் லக்ஷணமும், தத்தவாந்தர பேதமும் உதாஹரணமும் காட்டியிருக்கிறார். ஆவஶ்யகமான விஶேஷ விசாரமும் அங்கங்கே செய்யப்படுகிறது. இப்படிச்செய்துகொண்டு பர்யநுயோஜ்யோபேக்ஷணம் என்னும் நிக்ரஹ ஸ்தாந நிரூபணத்தோடு த்விதீயாஹ்நிகத்தை முடிக்கிறார்.

மூன்றாவது ஆஹ்நிகத்தில், ‘ [illegible] ’ என்று ஆரம்பித்து, இதனுடைய பேதங்களையும், அந்த பேதங்களுள் பேதங்களையும், தத்வாந்தர பேதங்களையும் ஸாங்கோபாங்கமாகக் காட்டிவிட்டு, இவைகளின் உதாஹரண தத்விமர்ஶ க்ரந்தாந்தர ஸம்வாத விஸம்வாதாதிகளாலேயே த்ருதீயாஹ்நிகத்தை உபஸம்ஹரிக்கிறார்.

நான்காம் ஆஹ்நிகத்தில், நிக்ரஹ ஸ்தாநத்வேந பூர்வோத்திஷ்டங்களான ப்ரமாணுபரீக்ஷைகளை உதாஹரண விசார க்ரந்தாந்தர

ஸம்வாதாதி பூர்வகமாக நிரூபித்திருக்கிறார். இந்த சதுர்த்தாஹ்நிகத்தில், ஊஹ்யவ்யாவ்ருத்தீகாரோவ்யாவகாநிஷ்வ்யஸஞ்ஜநாத்மகமான தர்க்கம் என்பது அநுமாநாந்தர்ப்பூதமா? தத்வ்பதிரிக்தமா? என்றும், இது ப்ரமாணமா? அப்ரமாணமா? என்றும், இது ப்ரமாணநுக்ராஹகமென்று சொல்லும் பக்ஷத்தில், எப்படி ப்ரமாணநுக்ராஹகத்வ மென்றும், பூர்வாசார்ய ஸூக்திகளை ஒவ்வொரு பக்ஷத்திற்கும் ப்ரமாணத்வேந காட்டி, ஸ்ரீ தேசிகன் பெரிய விசாரம் செய்தருளியிருக்கிறார். இவ்விதம் நாலாவது ஆஹ்நிகமும் அநுமாநாத்பாயமும் முடிவடைகிறது.

III. மூன்றாவதான ஸப்தாத்யாயத்தில் ப்ரதமாஹ்நிகத்தில் 'சுநாவ்யாநாக்ஷ வாக்யஜநிதம் யதிசூஷ்டி விஜ்ஞாநம் தத்வசர்ணம், காரண தோஷவாயகா ஞஸுநாக' என்று ஆரம்பித்து, ஸாப்த ப்ரமாணம் ப்ரத்யக்ஷாநுமாந வஹிர்ப்பூத மென்பதை ஸ்தாபித்துக்கொண்டு, வாக்ய லக்ஷணத்தைச் சொல்லி, பௌருஷேயம் என்றும், அபௌருஷேய மென்றும் வாக்யத்தை விபாகித்து, அநந்வயாக்ரஹ மிருந்தால் அந்வித வ்யவஹாரம் க்வசித் உண்டாகலா மென்கிற ஏகதேஸிமதத்தை நிரஸித்துவிட்டு, 'அபௌருஷேய வாக்யங்கள் எல்லாம் அந்விதார்த்தங்கள் தாம் என்று தீர்மானித்துப் பின்பு, அபிதை என்னும் உபசாரம் என்னும் வ்ருத்தியின் த்வைவித்யத்தைக் காட்டியருளினார். உபசார வ்ருத்தியினுடைய பேதங்களாக லக்ஷணா வ்ருத்தியையும் கௌணீ வ்ருத்தியையும் சொல்லிவிட்டு, 'வநதாஜவயா சுவி வ்யத்தம். யஃ சுநிதாஸியாந வ்யத்வஜ ஷூதாவவ' என்று அந்விதாபிதாந வாதத்தில் பர்யவஸாநம் பண்ணுகிறார். இங்கு மதபேதாதிகளும் அபிஹிதாந்வய வாதத்தில் தோஷங்களும் நிரூபிக்கப்படுகின்றன. வ்ருத்திநிரூபண ப்ரஸங்கமாகையால் 'தத்வமஸி' என்கிற வாக்யத்தில் லக்ஷணாவாதிகளுடைய மதமும் நிரஸிக்கப்படுகிறது. இதேப்ரகாரம் ஸத்ய ஜ்ஞாநாதி வாக்யங்களிலும் பரா

பிமதமான அர்த்தம் நிரஸிக்கப்படுகிறது ப்ரதமாஹ்நிக ஶேஷத்திலும் த்விதீயாஹ்நிகத்திலும் முக்யமாய்ச் சொல்லப்படும் விஷயங்களாவன:—ஶப்த ப்ராமாண்யம், வேதஸ்ய ஸ்வத: ப்ராமாண்யம், வேதாநித்யத்வாநுமாந கண்டநம், ப்ரதிப்ரயோகம், வேதநித்யத்வ ஸ்தாபநம், விதிஸ்வரூப விவேகம், ஆதுநிக மீமாம்ஸாபிமத தேவதாரூபாவ கண்டநம், பாஞ்சராத்ராகம ப்ராமாண்யம், இதராகம வைலக்ஷண்யம், ஆகிய இவைகளே.

IV. ஸ்ம்ருத்யத்யாயத்தினுடைய இரண்டு ஆஹ்நிகங்களிலும் முக்யமாகச் சொல்லப்படும் விஷயங்கள் அடியில் குறிப்பிடப்படுபவைகளே: ஸ்ம்ருதி லக்ஷணம், ஸ்ம்ருதி ப்ராமாண்யாக்ஷேபம், தத்பரிஹாரம், பூர்வக்ரந்த ஸம்வாதம், தர்ஶநாந்தர ஸம்வாதம், ப்ரமாண ஸங்க்யாபேதம், தர்ஶநாந்தர மதபேதம், ப்ரத்யபிஜ்ஞாயா: ப்ரத்யக்ஷாந்தர்ப்பாவம், தர்ஶநாந்தரபேதம், உபமாநஸ்ய ஸ்ம்ருதி ப்ரத்யக்ஷ ஸமாநயோபயோகமாநயோரந்தர்ப்பாவம், அர்த்தாபத்யபாவம், ஸம்பவம், ஐதிஹ்யம் ஆகிய இவைகளுக்கு யதாஸம்பவம் அநுமாநாகமாதிகளில் அந்தர்ப்பாவம், அபாவஸ்ய பாவாந்தரத்வ கதநம், சேஷ்டா, விப்யக்ஷரம், ப்ரதிபை ஆகிய இவைகளுக்கு அநுமாந ப்ரத்யக்ஷாந்தர்ப்பாவம். ‘பரோக்ஷாபரோக்ஷ பேதேந ப்ரமாணம் த்விவிதம்’ என்னும் பௌத்த தர்மகீர்த்தியின் மதத்திற்குக் கண்டநம் ப்ரமாண சிந்தாபலம். ‘உபகாரோபாவ ரோபாயாதோ நைவ ப்ரவர்த்ததாம் । உபவபூர்வ விமோஹ்யவ விமோஹ்யா தாநவதி:’ என்கிற ஸ்ரீ தேசிகனுடைய ஶப்தாத்யாயோப ஸம்ஹார வாக்யம் ஸ்மரணீயமானது.

V. ப்ரமேயாத்யாயத்தில், ‘ஶ்ரவம் ஸர்வமிகாரம் ப்ரமாணம் விமோசிதம், உபப்ரமேயம் ப்ரமேயார்த:. தத்த்வத்ரயம் ஷட் த்ரவ்யாதி ஸப்தவேண் வதாஸங்ப்ரு விஹ்ய வைஶேஷிகா ஜய ஸ்ரீஜயஸ்ரீ, தஸ்ஸாக்ஷாதுபவமப்ரூதிதி வைதரேவாஸ்யவேதம்’ என்று ஆரம்பித்து, ஸ்ரீ தேசிகன், முதலில் த்ரவ்யஶே

ஷிகருடைய பதார்த்த விபாக ப்ரக்ரியையும், அவர் அங்கீகரிக்கும் ஸமவாயத்தையும், விஶேஷத்தையும், ஸாமாந்யத்தையும், விஸ்தரேண தூஷிக்கிறார். மேலும் 'த்ரவ்யம் குணகர்மஸு' என்கிற விபாகமும் அநுபபந்நமென்று காட்டிவிட்டு, ஜ்ஞாநத்தைக் குணமாகச் சொன்னதைக் கண்டித்து, அதற்கு த்ரவ்யத்வத்தை ஸாதிக்கிறார். அவயவிவாதம் கண்டிக்கப்படுகிறது. கிம்பஹுநா, வைஶேஷிக மதம் ஸங்க்ரஹேண ஆபாதசூடம் கண்டிதமென்றே சொல்லவேணும். மேலும் கௌமாரிலாபிமதமான ஶப்த விபுத்வ த்ரவ்யத்வ வாதமும், நையாயிகாத்யபிமதமான தமஸ்ஸிற்குத் தேஜோபாவ ஸ்வரூபத்வமும் கண்டிக்கப்பட்டு, ஸித்தாந்த ரீத்யா த்ரவ்யாத்ரவ்ய விபாகம் காட்டி, ஸங்க்ரஹமாக அவைகளின் ஸ்வரூபாதிகளும் காட்டப்படுகின்றன. இதனுடன் ஸம்ருத்யத்யாய ப்ரதமாஹ்நிகம் முடிவுபெறுகிறது.

த்விதீயாஹ்நிகத்தில், 'ப்ரமாவிஷய: ப்ரமேயம்' என்று சொல்லக்கூடுமானாலும், நிஶ்ரேயஸார்த்திகள் 'ப்ரகர்ஷேண மேயம் ப்ரமேயம்' என்றுதான் வ்யுத்பத்தி கொள்ள வேண்டுமென்று ஆரம்பித்துக்கொண்டு, 'ஆத்மஶரீரேந்த்ரியார்த்த புத்திமந: ப்ரவ்ருத்திதோஷப்ரேத்யபாவ பலது:காபவர்காஸ்து ப்ரமேயம்' என்கிற ந்யாய தர்ஶந ஸூத்ராநுஸாரேண த்வாதஶவித ப்ரமேயத்திற்கும் நம் ஸித்தாந்தாநுஸாரேண லக்ஷணாதிகளை நிரூபணம் செய்துவிட்டு, ந்யாய பாஷ்யவார்த்திகாத்யநுஸாரேண ப்ரமேய சாதுர்வித்யத்தையும், 'ஹேயம், தஸ்ய நிர்வர்த்தகம், ஹாநம், தஸ்யோபாய:' என்று காட்டியருளினார். இந்த விஷயத்திலேயே ப்ரமேயம் ஐந்து என்றும் ஆறு என்றுமுள்ள மத பேதங்களும் காட்டப்பட்டன. பின்பு, 'ந்யாயஸ்வரூப: ப்ரவ்ருத்திஸாமர்த்யாத் ஸம்ப்ரமோஹாந்தகாந் வ்யவஹாராந் ஸம்மத: - ததாஹி-ஹிதாஹிதம்வ ப்ரகர்ஷேண மேயம்' என்று தொடங்கி, இதன் விஸ்தாரமாகப் பல விஷயங்களையும், கர்மயோக ஜ்ஞாந

யோக தத்த்வகார்யாதிகளையும் நிரூபித்துவிட்டு, 'தத்த்வ வசீ
கரணம் தத்த்வஜ்ஞானமிதி ப்ரவேதி ஶாஸ்த்ரம் - ஸர்வம்ஹித தத்
ஸ்த்ராவஸானஸ்ய நிஜாத்ருஶம் ப்ரதர்ஶிதம்' என்று முடித்து
சார்வாகாத்யபிமத முக்தி ஸ்வரூபங்களைக் காட்டி, இவைகளை
இன்ன இன்ன காரணங்களால் நாம் ஒத்துக்கொள்ள முடியாது
என்று முடித்து, 'யத்நாத்யாஸ்த ஜைமிநி ப்ரப்ருதயஃ ஶ்ரா
த்தஸூத்ர நிர்மாதாரஃ யஸ்யாங்கத்வமயந்தி தேதயஃ பாணிநீ
யாத்ய விஷ்வ்யாத்ய । விஶ்வஷாஶிஹ வேதக்ஷேப விதர்ஷா விஶ்ரா
ந்தயே வாதிநாம் ப்ராவீண்யவிஷ்ட பயப்ரஶோதி ஸாரணிஃ ப்ரதாய
நிஷ்கண்டகா ॥' 'நிரஸ்ய நிஶ்சித்ய நிவிஶ்யயோக விஜ்ஞாபனா
ப்ரஸக்தி பவ்யேஷ்வபி ப்ராணியாந ஸாவாஸ்தே । ரதிம்ஹஜதி
வாஸநாயதி வோபயாத் க்ருதம் ரஸா வஸந்தீ ஸஹா வஸித
யஜ்ஞணி ப்ரஹ்மணி' என்னும் பத்யங்களோடு ந்யாயபரிசுத்தி க்ரந்
தத்தை ஸ்ரீ தேசிகன் தலைக்கட்டியருளினார்.

இப்பொழுது முன் சொன்னபடி கௌதம ந்யாய தர்ஶந
பஹிஷ்காராதி பக்ஷங்களைப்பற்றிச் சிறிது பேசுவோம். இந்த
விஷயத்தில் மூன்று பக்ஷங்கள் உண்டு. ஸர்வதா பஹிஷ்கார
பக்ஷம் ஒன்று; ஸர்வதா ஸ்வீகாரபக்ஷம் ஒன்று; ஆம்ஶிக பஹி
ஷ்கார ஸ்வீகாரபக்ஷம் ஒன்று.

முதல் பக்ஷத்திற்குள்ள காரணங்களாவன: இந்த ந்யாய
தர்ஶநத்தில் வேதவிருத்தங்களான இந்த்ரிய பௌதிகத்வாதி
வாதங்களும் நிமித்தேஸ்வர வாதாதிகளும் இருக்கின்றன. ஆகை
யால் இது பரித்யாஜ்யம். கௌதமர் ருஷியாகையால் அவர்
சொல்வதை நாம் ப்ரமாணமாகக் கொள்ளவேண்டுமென்கிற நிர்ப்
பந்தமுமில்லை. அங்ஙனமாகில், ப்ராஹ்மாவும் ப்ருஹஸ்பதியும் சொ
ன்ன சார்வாக மதத்தையும் நாம் ஸ்வீகரிக்க ப்ரஸங்கிக்கும். அவர்
இருவரும் ஆஸுர வ்யாமோஹார்த்தம் அப்படிச் செய்தனர்.
வக்த்ரு வைலக்ஷண்யம் பார்க்கக்கூடாது; வசோ வைலக்ஷண்
யம் தான் பார்க்கவேண்டுமென்றால், இது ப்ராக்ருதத்திலும்

துல்யம். கௌதமரும், துஷ்ப்ரக்ருதி வ்யாமோஹநார்த்தமாகச் செய்திருக்கக் கூடுமல்லவா? 'காணாதஶாக்ய) வாஷண்டை ஸ்த்ரயீதர்ம விரோதிபி: । த்ரிஜட யாஜிநா வசுவபும் விஷ்ணுநா ரக்ஷிதா த்ரயீ' என்கிற ஸ்ம்ருதியில் காணாதரைக் குறிப்பிட்டிருப்பது தத்ஸமாந தந்த்ரகர்த்தாவாகிய கௌதமருக்கும் உபலக்ஷணம் தான். 'பஹவ: புருஷா ராஜந் ஸாங்க்யயோக விசாரிண: । நைகம் இச்சந்தி புருஷம் ஏகம் குருகுலோத்வஹ ॥' என்கிற மஹாபாரதத்தில் சொல்லியிருக்கும் பஹிஷ்கார்யதா நிமித்தம் கௌதம ஸாதாரணம் தானே. நமது பூர்வாசார்யர்களும் 'காணாத ஶாக்யபாஶுபத காபிலம் தந்த்ரசைவ । தந்த்ராணி தாமஸானி ந தந்த்ராண்யத்ர நிர்ணயே ॥' என்று இதனை இகழ்ந்தார்கள். ஸ்ரீ பாஷ்யத்திலும், 'வேதாவலம்பிநஸ்ச ஸாங்க்யபக்ஷ க்ஷபணே நஶிஷ்டாஸ்து வேதாவலம்பிநா: கணபக்ஷா க்ஷபாத க்ஷபணபிக்ஷுபக்ஷா: க்ஷபிதா வேதிதவ்யா:' என்று காணப்படுகிறது. ஸூத்ராத்மகமான க்ரந்தங்கள் எல்லாம் வித்யாஸ்தாநங்கள் என்று கொள்ளலாகாது. அப்படியானால் பௌத்த ஸூத்ரத்தையும் ஸ்வீகரிக்க வேண்டி வருமல்லவா? இந்தக் கௌதம தர்ஶநத்தை நாம் ஒப்புக்கொள்ளாமல் போய்விட்டால், 'புராண ந்யாய மீமாம்ஸா' என்பவற்றில் ஒரு வித்யாஸ்தாநம் குறையாதோ என்றால், குறையாது. அநாதியான ஸம்ஸாரத்தில் இவர் ஒருவர்தான் ந்யாய விஸ்தரகாரர் என்று எப்படிச் சொல்லமுடியும்? அதவா, நாமே, சில ஸூத்ரங்களை வேதாவிருத்த ப்ரக்ரியையிலே எழுதி விடலாம். வித்யாஸ்தாநத்திற்கு ருஷிதான் கர்த்தாவாக வேணுமென்று வசநமோ ராஜாஜ்ஞையோ இல்லை. ஆகையால் தான் ஸ்ரீமந்நாதமுநிகள் ந்யாய தர்ஶநத்தைத் திரஸ்கரித்துவிட்டு, தாமே புதிதாக ந்யாய தத்வக்ரந்தத்தை எழுதிவிட்டார். இந்த க்ரந்தமே வித்யாஸ்தாநமாகலாம். ந்யாய தர்ஶநத்தில், பூர்வ க்ரந்த மாகையால் கௌதம ஸூத்ரத்தைப் பரிக்ரஹிக்க வேணுமென்றால், நவீநம் அப்ரமாணமென்று ஏற்படு மாகையால், வார்த்தி

காதிகளை அவரவர்கள் எழுதியிருக்க மாட்டார்களல்லவா? 'யமொதுரஂ ॐ-ஙீ௱ாஂ வூூாரொணூஂ' என்று வ்யாகரண ஶாஸ்த்ரத்தில் உத்தர க்ரந்தங்களுக்கு ஒரு ஏற்றத்தையும் கண்டுவருகின்றோம். [இந்த விடத்தில் ஸ்ரீ தேசிகன், ஸம்ப்ரதாயாநுஸாரிகளான 49 - ஸூத்ரங்களைச் செய்துகாட்டியிருக்கிறார்.]

ஒப்புக்கொள்ளும் பக்ஷத்திற்குக் காரணங்களாவன :— கௌதமரைத் தாமஸரில் படிக்கவில்லை. மநுஸ்ம்ருதிபோலே கௌதம ஸ்ம்ருதியும் ஶிஷ்ட பரிக்ருஹீதமாயிருக்கிறது. காணாதரைப் போல் இவரை வேததர்ம விலோபகர்களில் சேர்க்கவில்லை. கௌதமருடைய ஸூத்ரத்தில் வேதவிருத்தாம்ஶம் கிடையாது. காணாத தந்த்ரவாஸனை ஏறிய வ்யாக்யாதாக்களால் காணாத ஸித்தாந்தங்கள் ந்யாய தர்ஶநத்தில் புகுத்தப்பட்டிருக்கின்றன. ஸ்வகீய தந்த்ரங்களிலேயே அங்கங்கே விரோதம் தோன்றினால், நையாயிகாதிகள் தாத்பர்யாந்தர கல்பந நைர்ப்பர்யா பாவ வாத பரிமதாபிப்ராய வர்ணந பரத்வாதிகளால் ஸமர்த்தநம் செய்வதைப்போலவே, வேதாந்த விருத்தாம்ஶங்களிலும் கல்பநை பண்ணத் தட்டில்லை. அதவா, ஆபாததஃ வேத விருத்தார்த்த ப்ரதிபாதகங்களாகத் தோன்றுகிற ஸூத்ரங்களை எடுத்துக்கொள்வோம். அவைகளுக்கும் வேதவிருத்தமாகவே வ்யாக்யாநம் செய்துகாட்ட முடியும். ஸ்ரீ தேசிகன் க்ஷிப்ரதர்ஶநமாக முதலாவது அத்யாயம் முதல், ஐந்தாம் அத்யாயம் வரையில் ந்யாய தர்ஶந ஸூத்ரங்களில் சிலவற்றை எடுத்து வ்யாக்யாநம் செய்து காட்டியிருக்கிறார். நம்முடைய பூர்வாசார்யர்களும் ஸ்ரீ பாஷ்யகாரரும் நிராகரித்தது வ்யாக்யாத்ரு கலுஷீக்ருதமான அக்ஷபாத தர்ஶநத்தையே. ஆகையால் வித்யாஸ்தாநமாகிய இந்த ந்யாய தர்ஶநம் ஸர்வாம்ஶ ப்ரமாணமாய் ஸர்வாத்மநா ஸ்வீகரிக்கத்தக்கதே.

ஆம்ஶிக ஸ்வீகாரவாதிகளோவென்றால்-ஸாங்க்ய யோகங்களை ஸ்வீகரித்துக்கொண்டு, அவைகளில் அப்ராமாணிகாம்ஶங்களைத் தள்ளிவிட்டு, உபாதேயாம்ஶத்தை ஸ்வீகரிப்பதைப்போலவே, இந் ந்யாய தர்ஶநத்தையும் ஸ்வீகார்ய பாகத்தில் ஸ்வீகரிப்பது அநு

ஸிதமல்ல என்கிறார்கள். ஆம்ஸிக ஹிஷ்காரத்தை எண்ணித் தான் ஸூத்ர பாஷ்ய பூர்வாசார்ய க்ரந்தங்களில் இது ஹிஷ்கரிக்கப்பட்டிருக்கிறது என்றும் சொல்லுகிறார்கள்.

இந்த மூன்று பக்ஷங்களில் முதல் இரண்டு பக்ஷங்களும் தத்வ முக்தாகலாபத்திலும் காட்டப்படுகின்றன. மூன்றாவது பக்ஷம் ந்யாய பரிசுத்தியிலும் ந்யாய விரோத நிஸ்தாராதிகாரத்திலும் சொல்லப்படுகின்றது.

தத்வ முக்தாகலாபத்தில், '𑌵𑌿𑌦𑍍𑌯𑌾𑌸𑍍𑌥𑌾𑌨𑍇𑌷𑍁 𑌯𑌦𑍍𑌯𑌪𑍍𑌯𑍁𑌪𑌧𑌿 𑌹𑌪𑌦𑌮𑌣𑌯𑌤𑍍 𑌶𑌾𑌸𑍍𑌤𑍍𑌰𑌂 𑌨𑍍𑌯𑌾𑌯𑌵𑌤𑍍𑌸𑍍𑌤𑌂 𑌤𑌥𑌾 𑌵𑌿𑌶𑍍𑌵𑌕𑍍𑌷𑌵𑌾𑌦𑍀 𑌸𑌜𑌤𑌿 𑌨𑌿𑌯𑌤𑌿 𑌨𑍍𑌯𑌾𑌯𑌤𑌤𑍍𑌤𑍍𑌵𑌾𑌵𑌮𑌾𑌦𑍇𑌦𑍍 । 𑌨𑌾𑌷𑍍𑌟𑌾𑌕𑍍𑌷𑌾𑌦𑌿 𑌵𑍍𑌯𑌾𑌪𑌾𑌦𑌂 𑌸𑍍𑌵𑌿𑌦𑌵𑌿 𑌪𑌦𑌿𑌵𑌾 𑌵𑌾𑌤𑌿𑌷𑍍𑌟𑌕𑌂 𑌸𑍍𑌵𑌾𑌵𑌿𑌯𑌤𑍍𑌤𑌂 𑌯𑌥𑌾𑌽𑌕𑍍𑌷𑌯𑌂 𑌕𑍍𑌷𑌯𑌂𑌹𑌿 𑌨𑍍𑌯𑌵𑌿𑌶 𑌦𑌵𑌿𑌦𑌕𑌿𑌂 𑌨𑌿𑌵𑌷𑍍𑌟𑌹 𑌸𑍍𑌥𑍍𑌯𑌵𑌦𑌸𑍍𑌤𑍍𑌯' என்றும், பரமத பங்கத்தில், 'ஆனபின்பு ந்யாய ஶாஸ்த்ரங்களில் குஶகாஶாவலம்பேந ஶமநிகையாதல், விருத்தாம்ஶ பரித்யாகமாதல், அநுகூல க்ரந்தாந்தர காரணமாதல் பண்ணி, சதுர்த்தஶ வித்யாஸ்தாநஸம்பத்தி பண்ணிக்கொள்ளலாம். இங்ஙனம் கொண்டாலல்லது வித்யாஸ்தாந பரிகணனை பண்ணுகிற தர்மஶாஸ்த்ரங்கள் தன்னோடு விரோதம் கழிக்க விரகில்லை ............ ஸூத்ராந்தரங்களிற்போலே எங்கும் வேதாந்தங்களோடு ஏக ரஸமாக யோஜிக்கை அக்ஷபாத பக்தர்க்கு அநுரூபம்.' என்றும்

"நான்மறைக்குத் துணையாக நல்லோரெண்ணும்
நாலிரண்டி லொன்றான நய நூல்தன்னில்
கூன்மறைத்தல் கோதுளது கழித்தல்மற்றோர்
கோணுத கோதில்வழி வகுத்தலன்றி
ஊன்மறைத்த வுயிரொளிபோ லொத்ததொவ்வா
துயரில்லாக் காணுத முரைத்ததெல்லாம்
வான்மறைக்க மடிக்கோலும் வண்ணமென்றே
மற்றிதற்கார் மறுமாற்றம் பேசுவாரே."

என்றும் ஸ்ரீதேசிகன் அருளிச்செய்திருக்கிறார்.

முற்றிற்று.

ஸ்ரீ:

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:

# வேதாந்த ஸங்க்ரஹம்.

---

பகவான்தான் ஜகத்காரணன் என்று முன்னமே வேதஸ்ருதிகளைக்கொண்டு நிர்ணயித்தோம். வேதவிருத்தமான ஸ்ம்ருதியும் யுக்திகளும் ப்ரயோஜநப்படா. உபநிஷத்தின் ஸாரத்தை ஸ்ரீ பாஞ்சராத்ரமாகப் பகவானே வெளியிட்டிருக்கிறான். ஜகத்தில், கார்யவர்க்கங்களில், அசித்தாகிற ப்ரக்ருதி ஒருநிலைப்பட்டதல்ல. ஜீவாத்மா நித்யன். ஆனால் அவன் ஸம்ஸார தசையில் ஜ்ஞாந ஸங்கோசத்தை யுடையவன்; துக்கஸம்பந்த முடையவன். சராசரம் எல்லாவற்றுக்கும் ஆத்மா பகவான். அவன் நிர்த்தோஷன்; ஸகல கல்யாணகுண ஸாகரம்; அபார காருண்ய ஸௌலப்ய ஸௌசீல்யமுடையவன். நித்யபலன் அநித்யபலன் ஸர்வகர்மத்தின் பயன் ஆகிய எல்லாவற்றையும் அவனே அளிப்பவனென்று வேதாந்த ஸூத்ரம் முதலிரண்டு அத்யாயங்களாலும், 3-ம் அத்யாயம் முதலிரண்டு பாதங்களாலும் நிர்ணயிக்கப்பட்டிருக்கிறது. ஆக பரஸ்வரூபம் ஜீவஸ்வரூபம் விரோதிஸ்வரூபம் ஆகிய மூன்றையும் இதுவரையில் சுருக்கமாய்ச் சொன்னோம். இனி அவனை அடையும் வழியைப்பற்றிச் சொல்வோம்.

*அவனை அடையும் உபாயம்.*

உபநிஷத்துக்களில் சொல்லியபடி பரமபலனாய், பரப்ரஹ்மமாய், நித்யனாய், குற்றமற்றவனாய், எல்லா உலகங்களுக்கும் முக்ய காரணனாய், யாவும் அறிந்தவனாய், எப்பொருட்கும் உயிராய், நினைத்ததைத் தப்பாமல் செய்யவல்லவனாய், மஹத்தான ஐச்வர்யவானாயிருக்கும் ஸ்ரீமந்நாராயணனைக் கிட்டுகைக்கு உரிய உபாயத்தை ஒருவிதமான ஜ்ஞாநமாகச் சில வேதாந்த வாக்யங்கள் சொல்கின்றன. அவை:—'தமேவம் விதித்வா அதி ம்ருத்யுமேதி' [அவனை அறிந்தால் தான் ம்ருத்யுவைக் கடக்கலாம்] 'தமேவம் வித்வாநம்ருத இஹ பவதி' [அவனை இப்படி அறிபவன் இங்கே அழிவில்லாதவனாகிறான்] என்பவன.

'த்ரஷ்டவ்ய: ........................ நிதித்யாஸிதவ்ய:' என்று பரமாத்மாவைக் காணவேணுமாகில் த்யாநம் செய்ய வேண்டும் என்றும், 'ததஸ்து தம் பச்யதே நிஷ்கலம் த்யாயமாந:' [அதை ப்ரத்யக்ஷமாய்க் கண்டு உபாஸிக்கக்கடவன்.] என்றும், 'ஸத்வ சுத்தௌ த்ருவா ஸ்ம்ருதி: ஸ்ம்ருதிலம்பே ஸர்வக்ரந்தீநாம் விப்ரமோக்ஷ:' [ஸத்வம் சுத்தமானால் இடைவிடாத சிந்தை உண்டாம். அந்த சிந்தை உண்டாகில், எல்லா முடிச்சுகளும் அவிழ்ந்து போகின்றன] என்றும், 'பித்யதே ஹ்ருதயக்ரந்தி: சித்யந்தே ஸர்வ ஸம்சயா: । க்ஷீயந்தே சாஸ்ய கர்மாணி தஸ்மிந் த்ருஷ்டே பராவரே ॥' [அந்த பரமாத்மாவைக் கண்டவுடனே உள்ளத்தில் உண்டான முடிச்சு அவிழ்ந்துபோகிறது; ஸகல ஸம்சயங்களும் அற்றுப்போகின்றன; இவனுடைய கர்மங்களும் அழிந்து போகின்றன.] என்றும் சொல்லப்பட்டிருக்கின்றன. மேலே சொன்ன வாக்யங்களால், முதலிற்கூறிய ஜ்ஞாநம் என்பது ப்ரத்யக்ஷரூபமான இடைவிடாத சிந்தையாயும் இருக்கவேண்டு மென்றும், அப்படிப்பட்ட சிந்தையானது த்யாநம் என்றும் உபாஸநம் என்றும் சொல்லப்படுகிறது.

மறுபடியும் இந்தப் பரமாத்மா, மநநத்தினாலாவது த்யாநத்தினாலாவது பலகாலும் கேட்பதினாலாவது அடையக்கூடியவனல்லன். இவன் எவனை வரிக்கிறானோ அவனால் மாத்ரம் பகவான் அடையப்பட்டு, தன் ஸ்வரூப ரூபகுணங்களை அவனுக்குத் தெளிவாய்க் காட்டுகிறானென்று முன்னே அடிக்கடி விவரித்திருக்கிறோம். 'நாயமாத்மா ப்ரவசநேந லப்யோ ந மேதயா ந பஹுநா ச்ருதேந । யமேவைஷ வ்ருணுதே தேந லப்யஸ் தஸ்யைஷ ஆத்மா விவ்ருணுதே தநூம் ஸ்வாம்' என்று வேதபுருஷன், மிக்க ஆதரத்துடன், ஒருதடவை சொன்னாற் போதாதென்று, கடவல்லியிலும் முண்டகோபநிஷத்திலும் பலபடியில் வெளியிட்டிருக்கிறான். 'ஜ்ஞாநப்ரஸாதேந விசுத்த ஸத்வஸ் ததஸ்து தம் பச்யதி' என்று பகவத் கருணையின் ப்ரஸாதமான ஜ்ஞாநத்தால் அவனை

நேரில் ஸாக்ஷாத்கரிக்கிறான்; பார்க்கிறான். இவைகளின் ப்ரகாரம் அப்படி அவன் வரிப்பதற்குக் காரணம், இவன் செய்யும் இடைவிடாத ப்ரத்யக்ஷ ரூபமான சிந்தையின் ப்ரீதியும் பகவத்க்ருபையுமே என்று ஏற்படுகிறது. பக்தியென்றால் ஸ்நேஹ பூர்வமான மஹாத்யாநம். பகவானையடைய வேறுவழியில்லை. ‘நாந்யஃ பந்தா அயநாய வித்யதே’ என்று ஶ்ருதியும் கூறியது. ‘நாஹம் வேதைர்ந தபஸா நதாநேந நசேஜ்யயா । ஶக்ய ஏவம் விதோ த்ரஷ்டும் த்ருஷ்டவாநஸி மாம்யதா ॥ பக்த்யாத்வநந்யயா ஶக்ய அஹமேவம் விதோர்ஜுந । ஜ்ஞாதும் த்ரஷ்டும் ச தத்த்வேந ப்ரவேஷ்டும் ச பரந்தப ॥’ [வேதம், தபஸ், தாநம், யாகம் இவற்றால் நான் பார்க்கப்படத்தக்கவனல்ல. மற்றைப்படி, என்னையே விஷயமாகச் செய்யும் பக்தி ஒன்றால் மாத்ரம் என்னை உள்ளபடி அறியவோ பார்க்கவோ அடையவோகூடும்] என்று கீதையும் சொல்கின்றது. இப்படி ஶ்ருதி ஸ்ம்ருதி வாக்யங்களையெல்லாம் சேர்த்துப் பார்த்து ‘அபி ஸம்ராதநே ப்ரத்யக்ஷாநுமாநாப்யாம்’ என்று ஸூத்ரகாரரும் கூறியுள்ளார். இப்படி, மஹா ப்ரேம ரூபமாயுள்ள தர்ஶந ஸமாநமான பக்தியாகிற ஜ்ஞாநத்தால் அவனை அடையலாகும் என்பது இவற்றால் ஏற்படுகிறது.

பரமாத்மாவின் ஸ்வரூபம், குணம், கார்யம் முதலிய இவைகள் பிரியும்படி நேரிட்டால், அந்த க்ஷணமே பரமாத்மாவினிடத்தில் இருக்கும் அதிவிருப்பத்தால் நீர்ப்பண்டம்போல் உருகிப் போகும்படியான மனத்தைக்கொண்டு பரமாத்மாவையே நாடினவனுய், அவன் பிரிவில் தரிக்கமாட்டாமல், அவனையும் அவன் க்ருபையையுமே ஆதாரமாக நம்பிச் செய்யும் ஆராதகாதலை உடையவனுகின்றான் ஜீவன். அப்படிப்பட்ட ஆராதகாதலே [பக்தி] உபாயமென்று ஏற்படுகிறது. இந்த உபாயத்தின் அந்தந்த தசைக்குத் தகுந்தபடி, அதை, ப்ருஹ்மஜ்ஞாந மென்றும், பகவத்த்யாநமென்றும், பகவதுபாஸநை யென்றும், வேதநம் என்றும் சொல்வார்கள்.

உபாஸந குணங்கள்.

பகவத் த்யாநம் செய்யவேண்டிய ப்ரகாரங்களும், ப்ருஹ்ம வித்யைகளில் அநேக விதங்களும், எந்தெந்த குணங்களைச் சேர்த்து எப்படி த்யாநிக்கலாம்? எது எது தனித்தனியே த்யாநிக்கப்படவேண்டும்? எந்த குணங்கள் எல்லா வித்யை [உபாஸநங்கள்] களிலும் த்யாநிக்கப்படுகின்றன? என்னும் விஷயங்களும் III - 3 - ம் பாதத்தில் விவரிக்கப்படுகின்றன. பகவான் ஒருவனே எல்லாவற்றுக்கும் உயிர். அவன் ஒருவனே ஸ்வதந்த்ரமான இருப்புள்ளவன். மற்றவெல்லாம் அவனுக்கு ப்ரகாரங்கள். எல்லாம் அவன் அதீநம். அவன், அளவில்லாத ஜ்ஞாநத்தையே ஸ்வரூபமாக உள்ளவன். நிரதிஶயாநந்த ஸ்வரூபன்; நிர்த்தோஷன்; அமலத்வ ஸ்வரூபன்; அக்ஷரம்; என்று அவனுடைய ஸரீரபூத குணங்கள் குறிப்பிடப்பட்டன. அதாவது - ஸத்யம், ஜ்ஞாநம், அநந்தம், ஆநந்தம், அமலத்வம், இவைகளைக்கொண்டே அவனை நிரூபிக்க வேண்டும். இந்த ஸ்வரூப நிரூபககுணங்கள் எல்லா வித ப்ருஹ்ம வித்யையிலும் த்யாநத்தில் சேரும். ஜகத் காரணம், ஸத்யகாமத்வம், ஸத்ய ஸங்கல்பத்வம், காருண்யம் என்று சொல்லப்படும் குணங்கள், அந்தந்த வித்யைக்குத் தகுந்தபடி, சில வித்யைகளில் தான் த்யாநத்தில் சேருமென்று சொல்லப்பட்டிருக்கிறது.

அநேகவித வித்யைகளில், ஒவ்வொன்றும் தனித்தனியாய் மோக்ஷஸாதநம் என்றும், எல்லாவித உபாஸகர்களும் அர்ச்சிராதிகதி என்னும் மார்க்கமாக மோக்ஷத்திற்குப் போகவேண்டுமென்றும் சொல்லப்பட்டிருக்கின்றன. ப்ருஹ்ம ஜ்ஞாந மடைந்த பிறகுகூட வஸிஷ்டர், ஆந்தர தமஸ்போன்றவர்கள், ஒரு கல்பத்துக்கு ஒரு அதிகாரத்தை வஹிக்கும்படி தங்களுடைய கர்மத்தால் அடைந்தவர்கள், அந்தந்த அதிகாரம் உள்ளவரையில் ஒரு தேக வியோகமாய், இன்னொரு தேஹமடையும்படியாய்க்கூட இருக்கலாம். அந்தந்த தேஹத்துக்கு ஸம்பந்தப்பட்ட ஸுகதுக்கங்களை ப்ரஹ்மஜ்ஞாந மடைந்தாற்கூட தத்தம் அதிகாரத்துக்கு நிர்ணயித்த காலம் முடிவு வரையில் அநுபவிக்கும்படி யிருக்கும்.

" ஸஹஸ்ரஶீர்ஷா புருஷ: ஸஹஸ்ராக்ஷ: ஸஹஸ்ரபாத் - ஈஶானஸ்ஸர்வஸ்ய ஸர்வம் வ்யாப்ய நாராயண ஸ்திதஃ ............ பத்மகோஶ ப்ரதீகாஶம் ............ தஸ்யாஶ்ஶிகாயா மத்யே பரமாத்மா வ்யவஸ்திதஃ - விஶ்வசம்பவம் புருஷ:, தத்வம் நாராயண: பர:, ............ ஸோக்ஷர: பரம: ஸ்வராட் " என்று தைத்திரிய உபநிஷத்தில் சொல்லியபடி, ஸகலவித உபாஸநத்திலும், உபாஸிக்கப்படும் வஸ்து ஸகலாந்தர்யாமியாய், நியந்தாவாய், நிர்வாஹகனுமிருக்கும் ஸ்ரீமந்நாராயணன் என்று இந்த IV-3-ம் பாதத்தில் லிங்கபூயஸ்த்வாதிகரணத்தில் வ்யக்தமாய்ச் சொல்லப்பட்டிருக்கிறது.

உபாஸிக்கப்படும் வஸ்து நாராயணனே.

இந்த நாராயணபதம் ஸர்வேஸ்வரனைத் தவிர வேறொருவரையும் குறிக்காது. நாரங்களுக்கு அயநம்; நித்யமான பதார்த்தங்கள் யாவற்றுக்கும் ஆதாரமாயிருக்கும் வஸ்து. பரமபத வாஸிகளான நித்யர்கள், முக்தர்கள், சுத்தஸத்வமயமான பரமாகாஶம் முதலிய அசித், நித்யமான பகவத் குணங்களாகிற ஜ்ஞாநம் ஆநந்தம் அமலத்வம் ஶக்தி வாத்ஸல்யம் முதலியன, மஹா தேஜோமயமான திருமேனி காந்தி முதல்யன, மூலப்ரக்ருதி, கர்மத்தால் கட்டுண்ட ஜீவாத்மாக்கள், அண்டம், அதற்குட்பட்ட தேவாதிகள், ஆகிய தன்னையொழிந்த இப்படிப்பட்ட ஸகலத்துக்கும் ஆதாரமாயிருப்பவன். பரமாத்மாவின் பரத்வமும், இப்படி பகவான் ஸகல சேதநாசேதநங்களிலும் தம்மை அமைத்துக் கொண்டு புகுந்திருக்கையாலே அவனுடைய ஸௌலப்யமும் இப்பதத்தால் வெளியிடப்படுகின்றன.

நாராயணபதத்தின் அர்த்தம்.

எஸ். கோபாலஸ்வாமி ஐயங்கார்.

ஸ்ரீ:

𑌶𑍍𑌰𑌿𑌯𑍈 𑌨𑌮𑌃.

𑌶𑍍𑌰𑍀𑌮𑌤𑍇 𑌲𑌕𑍍𑌷𑍍𑌮𑍀𑌨𑍃𑌸𑌿𑌂𑌹 𑌪𑌰𑌬𑍍𑌰𑌹𑍍𑌮𑌣𑍇 𑌨𑌮𑌃.

# ஸ்ரீ உப. திருக்குடந்தை வித்வான் ஸேஷாசார்யர்.

---

𑌰𑌾𑌤𑍍𑌰𑌿𑌰𑍍𑌗𑌮𑌿𑌷𑍍𑌯𑌤𑌿 𑌭𑌵𑌿𑌷𑍍𑌯𑌤𑌿 𑌸𑍁𑌪𑍍𑌰𑌭𑌾𑌤𑌂
𑌭𑌾𑌸𑍍𑌵𑌾𑌨𑍁𑌦𑍇𑌷𑍍𑌯𑌤𑌿 𑌹𑌸𑌿𑌷𑍍𑌯𑌤𑌿 𑌪𑌙𑍍𑌕𑌜𑌶𑍍𑌰𑍀𑌃 ।
𑌇𑌤𑍍𑌥𑌂 𑌵𑌿𑌚𑌿𑌨𑍍𑌤𑌯𑌤𑌿 𑌕𑍋𑌶𑌗𑌤𑍇 𑌦𑍍𑌵𑌿𑌰𑍇𑌫𑍇
𑌹𑌾 𑌹𑌨𑍍𑌤 𑌹𑌨𑍍𑌤 𑌨𑌲𑌿𑌨𑍀𑌂 𑌗𑌜 𑌉𑌜𑍍𑌜𑌹𑌾𑌰 ॥

ஶ்ருதி ஸ்ம்ருதி புராணம் முதலிய ஶாஸ்த்ரங்களெல்லாம் மஹத்தான கேதத்தை அடைந்தும், ப்ராயேண ஜநங்களெல்லாரும் மனம் போன போக்கெல்லாம் போய்க்கொண்டு ஆத்மாவின் இருப்பையே மறந்து கேவலம் அர்த்த காம பரர்களாய் ஐஹிக ஶ்ரேயஸ்ஸையே பெரிதாக நினைத்து வர்த்தித்தும் நடைபெற்று வரும் இக்காலத்தில், தர்மமென்பது, பண்டிதர்களாயுள்ள சில வைதிகர்களிடத்திலேயே, வரப்போகும் க்ருதயுக ஆசாரத்திற்கு வித்துப் போல, ஒளிந்து வளர்கின்றது என்பதைக் கொஞ்சம் நிரூபணத்துடன் லோகஸ்திதியைப் பராமர்ஶிப்பவர்கள் அறிவார்கள். அம்மாதிரியான வைதிக பண்டிதர்கள் இங்குமங்கும் தென்படுவதைப் பார்த்து, இக்கலியின் கொடுமை ஶாஶ்வதமாக நிற்காதென்றும் பரமமான ஶ்ரேயஸ் ஆத்யந்திகமாக ஒளிந்து போகாதென்றும் க்ஷேமகாலம் வருமென்றும் நாம் ஆசையுடன் இருந்தோம். இரண்டு மூன்று ஸம்வத்ஸரங்களாக இம்மஹான்களுக்கு நேரும் லோபத்தை ஆலோசிக்கும் பொழுது, நமது ஆசை வீணாகிவிடுமோ என்னும் பீதி மநஸ்ஸில் ஜநிக்கின்றது. பகவதிச்சை அவ்விதமாக இருந்தால் யார் என்ன செய்யக்கூடும்?

சென்ற சித்திரை மாஸம் 15-ம் தேதி ஞாயிற்றுக்கிழமை, திருக்குடந்தை சதுஶ்ஶாஸ்த்ர வேத கல்பதரு மாடபூஷி ஸ்ரீ. உப. ஸேஷாசார்ய ஸ்வாமி பரமபதத்தை அடைந்து விட்டாராம். பங்குனி மாஸத்தில் ஸ்ரீராஜமன்னார் ஸந்நிதியில் நடந்த

வித்வத் ஸ்தஸ்ஸை அலங்கரித்துவிட்டு அவ்விடமிருந்து திருக்குடந்தைக்குத் திரும்பி எழுந்தருளின பிறகு, அவர், தேஹ ஆரோக்யத்தை அநுபவியாதவராய் ஸ்வல்ப காலம் வ்ரணரூபமான வ்யாதியினால் வருந்தி, பிறகு அதே வ்யாஜமாக இந்த விபூதியிலிருந்து மறைவை அடைந்ததாக நாம் கேள்விப்படுகிறோம். க்ருத க்ருத்யராக எழுந்தருளியிருந்த அந்த ஸ்வாமிக்கு, இந்தத் தேஹ வியோகத்தால் யாதொரு ஹாநியுமில்லை. ஆனால், அந்த ஸ்வாமியினிடத்திலேயே ஸர்வ ப்ராணனையும் வைத்திருந்த அவருடைய மாதாவுக்கும், அவரிடத்தில் மற்றைவிதமான பந்துத்வத்தை வஹிக்கும் அவருடைய இதர பந்துக்களுக்கும் அகாலத்தில் நேர்ந்த அவருடைய இந்த ம்ருதி அதி துஸ்ஸஹமாகவே இருக்கும். ஸ்ரீ பகவான், அவர்களுக்கு இந்தத் துக்க காலத்தில் தகுந்த அநுக்ரஹத்தைச் செய்து ஒரு வித ஆஸ்வாஸத்தைத் தந்தருள வேணுமென்று, தத்து:க்கது:கிதர்களான நாம ஹார்த்தமாக ப்ரார்த்திக்கிறோம்.

இம்மஹான், திருக்குடந்தையில் ஏற்றமுள்ள ஒரு ஸ்ரீவைஷ்ணவ திருவம்சத்தில் அவதரித்தார். பால்யத்தில் பித்ருவியோகம் நேரவே, பந்துக்களுடைய இஷ்டத்தை அநுஸரித்து ஸ்வல்ப காலம் த்ரவ்யார்ஜநார்த்தம் லோக மார்க்கத்தில் ப்ரவ்ருத்தித்தார். பிறகு, ஸத் ஸங்கமடியாக அதிலிருந்து நிவ்ருத்தராய், ஆத்ம ஜ்ஞாநத்தை ஸம்பாதித்துக் கொள்வதில் ஆசை கொண்டு, திருக்குடந்தைக்கு ஸமீபத்திலுள்ள வலயப்பேட்டை என்னும் ஸ்ரீ க்ராமத்தை அக்காலத்தில் அலங்கரித்து எழுந்தருளியிருந்த ஸத்தமரான ஸ்ரீ நாவல்பாக்கம் ஸ்வாமியை ஆசார்யராக ஆச்ரயித்து; அவருடைய கடாக்ஷ பலத்தால் ஆத்ம ஸத்தையை ஸுகரமாகப் பெற்றார். இதற்கு மேல், அத்தமக்கு உசிதமான காலங்களில், ஸாமாந்ய சாஸ்த்ர ஜ்ஞாநம் முழுவதும், ப்ராசீந ஜந்ம வாஸநையின் பலத்தாறம்பரில, தானே அவரை அடைந்தது. 'ஸ்வாத்யாய ப்ரவசநாப்யாம் ந ப்ரமதிதவ்யம்' என்னும் ச்ருதி வாக்யத்தையும் ஸ்ரீ ஆசார்யர்களின் கண்டோக்தமான முக்கிய நியமத்தையும் பலீயஸ்ஸாகத் திருவுள்ளம்பற்றி, இவர், ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஜ்ஞாநத்தின் ப்ரசாரத்திற்காகவே ஸ்ரீ லக்ஷ்மீ ஹயக்ரீவ படமென்னும் ஒரு ஸ்ரீ வைஷ்ணவ வித்யாலயத்தைத் திருக்குடந்தை ஸ்ரீ வராஹப்பெருமாள் திருவடி வாரத்

தில் ஏற்படுத்தி, அதில் தாமும் மற்றும் சில பண்டிதர்களுமாக் பாவஷாபாஷூ வித்யா ப்ரதாநம் செய்து கொண்டே வந்தார். இந்த வித்யா நிலயத்தை ஶாஶ்வதமாக ப்ரதிஷ்டை செய்ய வேண்டுமென்றும் அதிலுள்ள ஸ்ரீலக்ஷ்மீ ஹயக்ரீவப் பெருமானுக்கு ஒரு த்ருடமான ஸந்நிதியை நிர்மாணம் செய்யவேண்டுமென்றும் தீவ்ரமான அபிநிவேஶம் இவருக்கு இருந்தது. அது பூர்த்தியாகும் முன் எம்பெருமான் அவரைத் தனது திருவடிவாரத்திற் சேர்த்துக்கொண்டது நமது தௌர்ப்பாக்யமே.

இவருடைய ஜ்ஞாநத்தைப் பற்றி புகழ்ந்து பேச நாம் அநர்ஹர்களே. ஜகத்தில் அவருக்கு ஏற்பட்டிருககும் க்யாதி அவருடைய யோக்யதையை அளவிட ஒரு ப்ரமாணமாகும பக்ஷத்தில, அவரை விட ஶ்லாக்யதரமான பண்டிதர் இவ்விடத்தில இல்லையென்றே நாம் உறுதியாகச் சொல்லக்கூடும். நாலு ஶாஸ்த்ரங்களிலும் ஸர்வதோ முகமான ஜ்ஞாநத்தைப் பெறுவதும், அந்த ஜ்ஞாநத்திற்கு அநுரூபமான வைதிகாசாரத்தைப் பூர்ணமாகக் கொள்வதும, அந்த ஜ்ஞாநாநுஷ்டாநங்களை பிறரிடம் ஸங்க்ரமிப்பதில் தீவ்ர ஆஸக்தியை உடைத்தாயிருப்பதும் இவருடைய அஸாதாரணகுண விஶேஷங்களாக இருந்தன. அவருடைய வித்யாஶாலையில் வித்யார்த்திகளாக இருந்து, அவருடைய குணவிஶேஷங்களையும் போக்யதா விஶேஷங்களையும் பூர்ணமாக அநுபவித்து அவைகளின் ப்ரயோஜநத்தை ஸமக்ரம் பெற்றவர்களான பல வைதிக வித்வத் ரத்நங்களை நாம் அறிவோம். இன்னும் ஸ்வல்பகாலம இவர் இந்த விபூதியில் எழுந்தருளியிருந்தால், மற்றும் பல வைதிக வித்வான்கள் ஏற்பட்டு நமது ஸித்தாந்தத்திற்கு த்ருடதரமான ப்ரதிஷ்டையைச் செய்விப்பார்கள் என்பதில ஸந்தேஹமில்லை. அது துர்லபமாகி விட்டதே என்பதுதான் நமககு முக்கிய ஶோக ஹேது.

ஸ்ரீ வைஷ்ணவ ஸித்தாந்த ஸபைக்கு இவருடைய வியோகம் அஸஹ்யமே. பற்பல தடவைகளில இவரால் அதற்குப் பெரிய உதவி நேர்ந்திருககிறது. ஒரு வருஷம் முந்தி திருக்கண்டியூரில் நடைபெற்ற ஸ்ரீ வைஷ்ணவ மஹாஸங்கத்தில் இவர் அக்ராஸநத்தை வஹித்தார். சென்ற வர்ஷத்திய பூவிருந்தவல்லி ஸதஸ்ஸிலும் இவர் ஸந்நிஹிதராயிருந்து "ஹித நிரூபணம்" என்னும் விஷயத்தைப் பற்றி சிறந்ததொரு உபந்யாஸத்தைச்

செய்தார். ஸ்ரீவைஷ்ணவ ஸித்தாந்த ஸபையை பலப்படுத்துவதில் இவருக்கு விஶேஷித்த ஊக்கம் இருந்தது. பல தடவைகளில் ஸபையின் அபிவ்ருத்தியைக் குறித்து அவர் சொல்லி அனுப்பிய ஹிதோபதேஶங்கள் ஒருபொழுதும் மறக்கத்தகுந்தவைபல்ல. அவருடைய ஸம்பந்தத்தால் ஸபைக்கே ஒரு ஏற்றம் இருந்தது. அவருடைய ஸாக்ஷாத் ஸம்பந்தம் இனி ஸாத்யமில்லாமற்போனாலும், அவருடைய கடாக்ஷபலம் நமக்கு அபேக்ஷிதமான உதவியைச் செய்து நமக்கு எவ்வித குறைவுமில்லாமல் நம்மைப் பாதுகாக்குமென்றே நம்புகிறோம்.

ஜந்மம் எடுத்தது முதல் ஶுத்தராயும், எப்பொழுதும் தர்மசிந்தையையே உடையவராயும், மஹத்தான ஆஸ்திக்யம் நிறைந்தவராயும், உத்க்ருஷ்டமான ஜ்ஞாந மிருக்கையிலும் ஸர்வருக்கும் ஸுலபராயும், வைதிக ஸ்ரீயை மேன்மேல் வ்ருத்திசெய்வதில் மஹா வ்ரதங் கொண்டவராயும், ஸ்ரீவைஷ்ணவ ஸமூஹத்திற்கே ஸர்வ ப்ரகாரத்திலும் முக்கிய ஆபரணபூதராயும் இருந்த இந்த மஹானுடைய நாஶத்தை ஸ்ரீபகவான் யதோசிதம் யதாத்ருப்தி சீர்திருத்தவேணுமென்று நாம் ப்ரார்த்திக்கிறோம்.

மயிலாப்பூர்,
1—5—1919.

ஸ்ரீ. வாஸுதேவாசார்யன்

# கடிதங்கள்.

## (1)

ஸ்ரீமதே ராமாநுஜாய நம:.

ஸ்ரீ. வே. தீ. பத்ராதிபருக்கு :—

அடியேன் ஷோலாபூருக்கு நிமந்த்ரிதனாகப் போயிருந்தேன். ஸ்ரீமாந் சித்தூர் ராஜகோபாலாசார்யரும் எழுந்தருளியிருந்தார். காஞ்சீபுரம் ஸ்ரீப்ரதிவாதி பயங்கரம் அநந்தாசார்ய ஸ்வாமியின் அத்யக்ஷதையில் ஏப்ரல்மீ 17உ முதல் 21உ வரையில் ஒரு ஸ்ரீவைஷ்ணவ மஹா ஸம்மேளநம் நடைபெற்றது. மால்வா, குஜராத், பரோடா, ப்ருந்தாவநம், புண்ட்ரபுரம் முதலிய இடங்களிலிருந்து ஹிந்தி பண்டிதர்கள் அநேகர் வந்திருந்து, ஶாஸ்த்ராதி முதலான அநேக விஷயங்களைக்குறித்து ப்ரஸ்தாவித்தார்கள். ஸ்ரீகாஞ்சீ, ஸ்ரீபெரும்பூதூர், பம்பாய் முதலிய இடங்களிலிருந்தும் நம்

ஸ்ரீ வைஷ்ணவ ஸ்வாமிகளும் எழுந்தருளியிருந்தனர். ஸம்ஸ்க்ருதம், இங்க்லீஷ், கன்னடம் இப்பாஷைகளில் விசிஷ்டாத்வைத ஸித்தாந்தம் முதலான விஷயங்கள் ப்ரஸங்கிக்கப்பட்டன. ததீயாராதநம் முதலானவற்றின் வைபவம் விவரிக்க முடியாதது. அவ்விடத்திய மஹாராஷ்ட்ரர்கள், விஷயங்களை மிகவும் பக்தியுடனும் சிஷ்யபாவத்துடனும் ப்ராஹ்மண ப்ரீதியுடனும் விமர்சையாகவும் விபவமாகவும் நடத்தி, ஸகல ஸஜ்ஜந மநோஹாரித்வத்தை உண்டாக்கினார்கள். ஸ்ரீ அநந்தாசார்ய ஸ்வாமி, அபிநவபாஷ்யகாரர்போல் திக்விஜயம் செய்துகொண்டே வருகிறார். இது, ஸ்ரீவைஷ்ணவ ஸமுதாயத்துக்கே மஹாப்ரபாவத்தை உண்டாக்குகிறது. இது மிகுதியாகக் கொண்டாடத் தகுந்த விஷயம். இவர், அதர்மகாலத்தில் தர்ம ஸ்தாபநத்தையும் அவைஷ்ணவ வாஹுள்ய வைஷ்ணவத்வ ப்ரகாசத்தை செய்துவருகிறார். ஞாந பக்தி வைராக்யங்களில் உபமாநமற்றவராய் எழுந்தருளியிருக்கிறார். இந்த ஸ்வாமி ஸ்வதேசம்விட்டு, 8-வருஷகாலமாய் ராமாநுஜாரிய திவ்யாஜ்ஞையைச் செலுத்தி, நம் தேசத்துக்கு மிகுதியான யசஸ்ஸைத் தந்துவிட்டார்.

மைஸூர், வேதக்ருஹம்
7—5—19.

ஆ. கோவிந்த தாஸ்.

---

(2)

## ஸ்ரீபகவத் ராமாநுஜ ஸித்தாந்த ஸம்வர்த்தநீ ஸபை,

## திருவையாறு.

ஸ்ரீ. உப. வே. தீ. பத்ராதிபருக்கு:—

சென்ற சித்திரைமீ 22௳ ஞாயிற்றுக்கிழமை (4—5—19) திருவாதிரை நக்ஷத்திரம் கூடிய சுபதினத்தில் ஸ்ரீவிசிஷ்டாத்வைத ஸித்தாந்த ஸ்தாபகரான ஸ்ரீபகவத்ராமாநுஜ மஹாதேசிகனுடைய திருவவதார மஹோத்ஸவ மானபடியால் அந்த மஹோத்ஸவத்தை இந்தச் சபையோர்கள் வழக்கம்போல் அடியிற்கண்டபிரகாரம் கொண்டாடினார்கள்.

சித்திரைமீ 17௳ (29-4-19) 4½-மணி ஆசார்ய வைபவம் ஸ்ரீ-உ-ஸ
T. G. அனந்தாசாரியர் M. A., L. T.,

சித்திரை மீ 18உ (30-4-19) 4½-மணி ஸ்ரீவைஷ்ணவவைபவம் ஸ்ரீ. உ.வே. ஈயுண்ணி ஸ்ரீநிவாஸாசாரியர்

„ 19உ (1-5-19) 4½-மணி வாதிகேஸரிவைபவம் ஸ்ரீ. உ.வே. ஸ்ரீநிவாஸாசாரியர் பெரியமுறை.

„ 20உ (2-5-19) ஸ்ரீமத்ராமாயணம் ஸ்ரீ. உ.வே. M. S. ஸந்தாணமய்யங்கார் ஸ்வாமி.

„ 21உ (3-5-19) குலசேகரப்பெருமாள் வைபவம் ஸ்ரீ. உ.வே. ச. தி. சக்கிரவர்த்தியாசாரியர் கலியாணபுரம்

„ 22உ (4-5-19) காலை 7 - முதல் 8½ - வரை ஸ்ரீ-உ.வே. A. V. கோபாலாசாரியர் M. A. B. L. அக்ராஸனத்தின்கீழ் ஸபாப்ரஸிடெண்டு ஸ்ரீ. உ.வே. ஸ்ரீ. வேதாந்தாசாரியர் M. A. L. T. அன்றைய ஸமாஜத்திற்கு ஸ்வாகதநிவேதநம் செய்தலும், ஸபையின்ஸெக்ரிடெரி வடுவூர் ஸ்ரீ. உ.வே. கிருஷ்ணசாமி அய்யங்கார் ஸபையின் வருஷாந்தரிபோர்ட்டு வாசித்தலும் நடைபெற்றன. 8½-மணி முதல் திருமஞ்சனம் ஸேவைகோஷ்டிகளும் நடைபெற்றன.

10-மணிக்கு ‘[illegible]’ வழுத்தூர் ஸ்ரீ. உ.வே. ஸ்ரீநிவாஸவரதாசாரியர்.

2. மணி முதல் 4-வரை ‘ஸ்ரீபகவத்ராமாநுஜ வைபவம்’ ஸ்ரீ. உ.வே. ஸ்ரீ. வேதாந்தாசாரியர் M. A. L. T.

4. முதல் 6 வரை ‘ஸர்வேச்வரஸௌலப்யம்’ ஸ்ரீ. உ.வே. A. V. கோபாலாசாரியர் M. A. B. L. திருச்சி

6½. முதல் 8½-வரை ‘பகவத்விஷயம்’ ஸ்ரீ. உ.வே. வ. ந. கிருஷ்ணமாசாரியர் ஒப்பிலியப்பன் ஸந்நிதி. 8½-மணிக்கு பெருமாள் பாஷ்யகாரர், வீதிப்ரமணம், சாற்றுமுறை கோஷ்டிகளுடன் உத்ஸவம் பூர்த்தியடைந்தது.

கார்யதர்ஸி.

(3)

## ஸ்ரீவேதாந்த தீபிகையின் நடை.

ஸ்ரீமதாம் [illegible] வேதாந்ததீபிகா [illegible] । வேதாந்ததீபிகாயாம்

[illegible]

[illegible]

ஶர்மாதேவீ· [illegible]

[இக்கடிதத்தில், ஶ்ரீ. உப. ஶர்மாதேவி ராமபத்ராசார்யரென்னும் நமது ஆப்தர், தீபிகையின் அபிவ்ருத்தியை உத்தேசித்து சில ஹிதங்களை ஸ்மரிப்பித்திருக்கிறார். அவைகளை யதாசக்தி அநுஷ்டானத்திற்குக் கொண்டுவருவதில் நாம் உத்யுக்தராக இருக்கிறோம். ஆனால், ஒரு அம்சம் மாத்ரம் விசேஷித்து விஜ்ஞாபித்துக்கொள்ளத்தகுந்ததாக இருக்கிறது. அது என்னவென்றால்—தீபிகையை சுத்தமான தமிழ் நடையிலேயே நடத்தவேண்டும் என்பது நம்முடைய நோக்கமன்று. நமது பூர்வாசார்யர்களால் அநுக்ரஹிக்கப்பட்டுள்ள மணிப்ரவாள சைலியை நிரர்க்களமாக ப்ரயோகித்து அதை ஶ்ரீவைஷ்ணவ ஸாமாந்யத்துக்கு அஸாதாரணமான நடையாகச் செய்யவேண்டுவதே நமது முக்யமான உத்தேசம். ஆனால், அபூர்வ ஸம்ஸ்க்ருத பதங்களை ப்ரயோகிப்பதையும் ஸாமாந்ய பதங்களை ப்ரயோகிக்குமிடத்தில் அவைகளை மிதத்திற்கு விஞ்சி ப்ரயோகிப்பதையும் யதாசக்தி நிறுத்த நாம் ஸித்தமாக இருக்கிறோம். ஸுலபமான ஸம்ஸ்கிருத பதங்களை தமிழ் லிபியில் எழுதுவதில் சில ஸௌகர்யங்கள் இருக்கின்றன. தமிழ்ப் பதங்களை க்ரந்தலிபியில் எழுதுவதில் எவ்வித குணத்தையும் நாம் அறியவில்லை.

ஶ்ரீ. வே. தீ. மானேஜர்.]